4. முன்னுரை

4.1. தொழில்கள்

4.1.5. விவசாயம் செய்தல்

4.1.5.2. கொல்லக்காடு

4.1.5.3. மோட்டாங்காடு

4.1.5.4. வயல்

4.1.5.5. பயிர் வகைகள்

4.1.5.5.1. தானிய வகைப் பயிர்கள்

4.1.5.5.1.1. சாமை

4.1.5.5.1.2. வரகு

4.1.5.5.1.3. தினை

4.1.5.5.1.4. பனிவரகு

4.1.5.5.2. பயரு வகைகள்

4.1.5.5.3. பழவகைகள்

4.1.5.5.4. எண்ணெய் வித்துப் பயிர்கள்

4.1.5.5.5. பயிரிடும் காலம்

4.1.5.5.6. பயிர்களைப் பாதுகாக்கும் முறை

4.1.6. வேட்டையாடுதல்

4.1.6.2. குழு வேட்டை

4.1.6.3. தனிநபர் வேட்டை

4.1.7. வனப்பொருட்கள் சேகரித்தல்

4.1.7.2. கிழங்கு அகழ்ந்து எடுத்தல்

4.1.7.3. தேனெடுத்தல்

4.1.7.4. தேன் எடுக்கும் முறைகள்

4.1.7.5. தேனெடுக்கச் செல்வோரின் உறவு முறைகள்

4.1.7.6. விறகு சேகரித்தல்

4.1.8. ஆடுமாடுகளை மேய்த்தல்

4.1.9. பிற தொழில்கள்

4.1.10. தொழில் முறையில் பெண்களின் பங்கு

4.1.11. தொழில் கருவிகள்

4.1.11.2. கலப்பை

4.1.11.3. நெகித்தடி (நுகத்தடி)

4.1.11.4. மோழி

4.1.11.5. கொண்டி (இரும்பு)

4.1.11.6. கயிறு (கலப்பைக் கயிறு)
4.1.11.7. மொலையாணிக் குச்சி
4.1.11.8. பூட்டு
4.1.11.9. சந்துலி
4.1.11.10. கடக்குச்சி
4.1.11.11. ஏர்கால்
4.1.11.12. பரம்பு
4.1.11.13. மாடு, எருது
4.1.11.14. உழக்கோள்
4.1.11.15. பிற உழவு முறை
4.1.12. உழவு மாடுகளைச் சுழிப் பார்த்து வாங்குதல்
4.1.13. வேட்டையின்போது வழிபாடு
4.1.14. மழை வேண்டிச் செய்யும் சடங்கு
4.1.15. விதைப்புச் சடங்கு
4.1.16. பொன்னேர்க் கட்டுதல்
4.1.17. அறுவடைச் சடங்கு
4.2. மருத்துவம்
4.2.5. மாந்திரீக மருத்துவம்
4.2.6. நம்பிக்கை மருத்துவம்
4.2.7. இயற்கை மருத்துவம்
4.2.7.2. தலைவலி
4.2.7.3. காதில் சீழ்வடிதல்
4.2.7.4. காலில் குத்திய முள் வெளியேற
4.2.7.5. பல்வலி
4.2.7.6. பாத வெடிப்பு
4.2.7.7. கண்வலி
4.2.7.8. உடல் வீக்கம்
4.2.7.9. விசக்கடி
4.2.3.7. பாம்புக்கடி
4.2.3.8. வெட்டுக் காயம்
4.3. தொகுப்புரை

## 4. முன்னுரை

ஆதி மனிதனின் வாழ்க்கை வேட்டையாடுதலையும் இயற்கையில் கிடைக்கும் காய்க்கனிகள், கிழங்குகள், விதைகள் போன்றவற்றை சேகரித்தலையும் முதன்மையான தொழிலாக இருந்துள்ளது. இதனையடுத்த நிலையில் காட்டெரிப்பு வேளாண்மையிலும் 'புனல்காட்டு' வேளாண்மையிலும் ஈடுபட்டு வந்துள்ளனர். மனித பண்பாட்டில் ஏற்பட்ட இத்தகைய பரிணாம வளர்ச்சி நிலைகள் பழங்குடிச் சமூகத்தில் இன்றும் எச்சமாகக் காணக்கிடக்கின்றன. உயர்ந்த மலைகளும் அடர்ந்த காடுகளும் சூழப்பட்ட இடங்களைத் தேர்வு செய்து வசிக்கத் தொடங்கிய பழங்குடி மக்கள் அவற்றைச் சார்ந்தே தனது தொழில்களை அமைத்துக்கொண்டனர்.

இவ்வாறு வாழ்ந்த மனிதன் தன்னுடைய உணவுத் தேவையை இயற்கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டும், வேட்டையாடியும் பூர்த்திச் செய்துக் கொண்டான். பின்பு இப்பொருளினை ஈட்டுவதற்கான கருவிகளை உருவாக்கி இக்கருவியின் உதவியோடு ஒவ்வொரு தொழிலையும் செய்யத் தொடங்கினான். இவ்வாறு வளர்ச்சி அடைந்த தொழில்கள்தான் மனிதனின் வளர்ச்சிக்கும் பொருளாதாரத்திற்கும் பெரிதும் உதவின. அன்று முதல் இன்று வரை மனித வாழ்க்கையில் உழைப்பு என்பது இன்றியமையாத ஒன்றாக உள்ளது. "உழைப்பு என்பது மூளையையே உடலையோ முழுவதுமாக வருத்தி ஏதோ ஒன்றைப் படைப்பதற்காகச் செய்கின்ற செயலைக் குறிக்கும்"[1] என்கிறது வாழ்வியற் களஞ்சியம். மலையும் காடும் சூழ்ந்த பகுதிகளில் வாழ்ந்து வரும் மலையாளியினப் பழங்குடி மக்கள் பல வகையான உடல் உழைப்பும் மரபு சார்ந்த தொழில் முறைகளையும் கொண்டிருக்கின்றனர்.

### 4.1. தொழில்கள்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது அந்நாட்டின் தொழில்கள் ஆகும். அதனால்தான் 'செய்யும் தொழிலே தெய்வம்' என்பார் பெரியோர்கள். உலக இயக்கத்தின் உயிர் நாடியாக விளங்குவதும் தொழில்கள். தொழில் தெரிந்தவன் சமதாய அரங்கில் தலை நிமிர்ந்து நடக்கின்றான். தொழில் திறனால் மனித சமுதாயத்திற்குக் கிடைக்கக் கூடிய உயர்வினைக் கருதி "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"[2] என்றார் பாரதியார். தொழில் செய்யாமல் ஒருவன் சோம்பிக் கிடப்பானேயானால் அவனை உலகம் மதிக்காது. எனவே, நான்குபேர் மதிக்கும்படி ஒருவன் வாழ்ந்து காட்டவேண்டுமானால் அவன் ஏதேனும் ஒரு தொழிலில் திறமை மிக்கவனாகச் சாதித்துக் காட்டுதல் நலம்.

மனிதன் தன்னுடைய உழைப்புத் திறனால் எதையும் சாதித்துக் காட்டவும் முடியும். சாதிக்கும் மனம் படைத்தோர் சாதனையாளராகவும் முடியும். இதனை உணர்ந்த

வள்ளுவரும் ‘‘வினைநலம் வேண்டியதெல்லாம் தரும்’’[3] என்கிறார் வள்ளுவர். மனித சமுதாயத்திற்கு மேன்மை அளிக்கக் கூடியது தொழில். எனவே, அதைத் திறம்படச் செய்து வெற்றி பெறுவதற்கான மன உறுதியும் உடல் வலிமையும் நிச்சயம் தேவை. ‘‘எல்லு முறியப் பாடுபட்டால் பல்லு முறியத் தின்னலாம்’’ என்கிற நாட்டுப்புற பழமொழியும் தொழிலின் மேன்மையை எடுத்துக்காட்டுகிறது. தொழில் தெரிந்தவன் யாரிடமும் கையேந்தி நிற்கவேண்டிய அவசியமில்லை.

அந்த வகையில் உழைப்பை உயர்வாகக் கருதி வாழ்ந்து வரும் மலையாளி இனப் பழங்குடி மக்களின் மரபு சார்த தொழில்கள் பற்றி ஆராய்வதாக இந்த இயல் அமைகிறது. இவர்களின் தொழில்களை விவசாயம் செய்தல், வேட்டையாடுதல், வனப்பொருட்களைச் சேகரித்தல், ஆடு மாடுகளை மேய்த்தல், பிறத்தொழில்கள் என ஐந்து நிலைகளில் வகைப்படுத்தி ஆராயலாம்.

### 4.1.1. விவசாயம் செய்தல்

மலையும் மலைசார்ந்த பகுதிகளிலும் வாழும் மலையாளி இனப் பழங்குடி மக்கள் பலரும் இன்று விவசாயத் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். ஆரம்பக் காலங்களில் காடுகளை வெட்டி எரித்து அவ்விடத்தில் காட்டெரிப்பு வேளாண்மையும் செய்து வந்துள்ளனர். கொத்துக்காடுகள், புனல்காட்டுச் சாகுபடி முறையில் வனம் அழிந்துவிடுவதாகக் கூறி அரசு தடை விதித்து 1952-ஆம் ஆண்டு மத்திய அரசினால் ‘வனப்பாதுகாப்புச்சட்டம்’ இயற்றப்பட்டது. வனப்பகுதிளில் உள்ள மரங்களைப் பாதுகாக்கவும், அபூர்வ வனவிலங்குகளைக் காக்கவும், காடுகள் அழிக்கப்படாமல் இருக்கவும் இச்சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. வருடந்தோறும் புதிய இடங்களைத் தேர்ந்தெடுத்துக் காடுகளை வெட்டிப் பயிர் செய்துவந்த மலையாளிகளுக்கு இந்த சட்டம் பெரும் தடைக்கல்லாக இருந்தன. பின்னர் மலைகளில் விவசாயம் செய்வதற்குரிய நிலம் அரசால் அளந்து ஒதுக்கப்பட்டது. அதுவரை காடுகளை வெட்டி பயிர்செய்து வந்த மலையாளிகள் அதன்பின்னர் அரசு ஒதுக்கப்பட்ட வளம் குன்றிய மண்ணில் பயிர் செய்ய வேண்டியநிலை ஏற்பட்டது.

பழங்குடிகள் ‘‘காட்டுமிராண்டி நிலையில் இருந்த காலத்தில் இயற்கைப் பொருட்களைச் சேகரித்தல் வாயிலாக தனது உணவுத்தேவையை நிறைவு செய்து கொண்டான். இயற்கைப் பொருட்கள் தொடர்ந்து கிடைக்காதபோது மீன்பிடித்தல், வேட்டையாடுதல், தேன் எடுத்தல் முதலியவற்றின் வாயிலாகவும் பின்னர் விவசாயத்தின் வாயிலாகவும் தன் தேவையை நிறைவு செய்து கொண்டான்’’[4] என்கிறார் இராமநாதன்.

மலையாளியினப் பழங்குடி மக்கள் மூன்று வகையான நிலங்களில் பயிரிடுகின்றனர். அவை **‘கொல்லக்காடு’**, **‘மோட்டாங்காடு’**, **‘வயல்’** போன்றவைகளாகும்.

4.1.1.1. **கொல்லக்காடு**

'கொல்லக்காடு' என்பது கரடுமுரடான சரிவுகள் கொண்ட பகுதியாகும். இந்நிலங்களில் மலையாளிகள் கொத்துக் கருவிகளைக்கொண்டு கொத்திப் பக்குவப்படுத்திப் பயிரிடுகின்றனர். இங்கு ஏர் பூட்டி உழக்கூடிய நிலை இல்லை. இந்நிலங்களைக் கொத்த **'கலக்கொட்டு, பிக்காசி, தோண்டுக்கழி'** போன்ற கருவிகள் பயன்படுத்தப்படுவதால் இது **'கொத்துக்காடு'** என்றும் கூறப்படுகிறது. இவ்வாறு பக்குவப் படுத்திய நிலங்களில் தினை, கொத்து சாமை, ராகி, காட்டுச்சோளம் போன்றவற்றைப் இங்குப் பயிரிடுகின்றனர். இதனை மலையாளிகள் 'காட்டெரிப்பு வேளாண்மை' என்றும் கூறுவர்.

பெரும்பாலான மலைவாழ் பழங்குடி மக்கள் இத்தகைய வேளாண்மை முறைகளை மேற்கொண்டு வந்தனர் என்பதற்குச் சில கதைகளைக் கூறுகின்றனர். "எங்களுடைய முன்னோர்கள் வளமையான மலைப் பிரதேசங்கள் உள்ள பகுதிகளில் சிறிய காட்டுப்பகுதியை வெட்டிப் புதர்களை எரித்துச் சாம்பலாக்கி அவற்றில் இராகி, தினை, சாமை, போன்ற தினைப்பயிர்கள் செய்து வந்தனர். நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் மட்டுமே அவ்விடத்தில் பயிர் செய்வோம். மண் வளம் குன்றிய பின்னர் வேறுறொரு காடுகளைச் தேர்வு செய்து மீண்டும் பயிர் செய்வோம். இவ்வேளாண்மையில் முதல்முறை காட்டையழிக்கும் போது மட்டுமே உடல் உழைப்பு அதிகமாக இருக்கும். மீண்டும் அவ்விடங்களுக்கு வந்து பயிர் செய்யும் போது அதிகமான உடல் உழைப்பு இல்லாமல் மிக எளிமையாக இருக்கும். இவ்வாறு எங்களுடைய முன்னோர்கள் பல்வேறு மலைப் பகுதிகளில் பயிர் செய்து அங்கேயே வாழ்ந்து வருகின்றனர்"[5] என்கிறார் கோவிந்தராஜ்.

இந்தியாவில் வாழ்ந்துவரும் பல்வேறு பழங்குடி மக்களும் பன்னெடுங் காலமாக இத்தகைய வேளாண்மை முறைகளைச் செய்துவந்துள்ளனர். ஆங்கிலேயர்கள் காட்டு மரங்களைத் தம் நாட்டிற்குக் கொண்டு செல்வதற்காகக் காட்டெரிப்பு வேளாண்மையைத் தடைசெய்ய முனைந்தனர். அவர்கள் கொண்டு வந்த வனப்பாதுகாப்புச் சட்டங்களால் இது படிப்படியாகக் கட்டுப்படுத்தப்பட்டன. சங்ககாலத் தொல்குடி மக்களின் வாழ்வியல் முறைகளிலும் காட்டெரிப்பு வேளாண்மை முறைகள் இருந்துள்ளதை

"யாஅம் (யாமரம்) கொன்ற மரம் சுட்ட இயவில்
பைந்தால் செந்தினை விளைந்து கதிர்விட்டது" – (குறுந்,பா.எ.198)
"மரம் கொல் கானவன் புனம்துளர்ந்து வித்திய
பிறங்கு குரல் இறடி (கருந்தினைக்கதிர்) ஆகிவிட்டது"

- (குறுந்,பா.எ.214)

என்ற சங்க இலக்கியப் பாடல்களின் வழி அறியமுடிகிறது.

சங்க காலத்தில் காட்டெரிப்பு வேளாண்மை செய்த குடியினர் பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்படுகின்றனர். கானக்குறவர், குன்றக் குறவர், புனங்குறவன், ஏனல் காவலர், கானவன், நாடன், (குறுந்.371), பல்கிளைக் குறவர், மலைஉறைக் குறவர், குடிக்குறவர், புனவன், சிறுகுடிக் கானவன் என்பனவாகும்.

### 4.1.1.2. மோட்டாங்காடு

**‘மோட்டாங்காடு’** என்பது ஓரளவிற்குச் சரிவான நிலப்பகுதியாகக் காணப்படுகிறது. இதனை மாடுகள் கொண்டு ஏர் பூட்டி உழுகின்றனர். இந்நிலத்தில் **‘சாமை, தினை, காட்டவரை, துவரை’** போன்றவற்றை ஊடுபயிர்களாகப் பயிரிடுகின்றனர். தினைப் பயிர்கள் அறுவடைக்குப் பின்னரே அவரை, துவரைகள் பூப்பூக்கத் தொடங்குகின்றன. இதனை

“பெரும்புனக் குறவன் சிறுதினை மறுக்கால்
கொழுங்கொடி அவரை பூக்கும்” - (குறுந். 82:பா.எ.4-5)

என்ற சங்க இலக்கியப் பாடல் வரிகளும் மெய்ப்பிக்கின்றன. பண்டையக் காலம் முதல் இன்று வரை இத்தகு வேளாண்மை முறைகள் இம்மக்களிடம் எச்சமாகக் காணப்படுகின்றன.

### 4.1.1.3. வயல்

**‘வயல்’** என்பது நீருற்றுக்கள், ஓடைகள், பள்ளமானப் பகுதிகளைக் கொண்ட நிலப்பகுதியில் பயிர் செய்வதால் இது **‘வயல்’** எனப்படுகிறது. இங்கு மலைநெல், சென்நெல், சம்பாப் போன்ற பாரம்பரிய நெல் வகைகள் பயிரிடப்படுகின்றன. மலையாளிகளிடம் முன்னர் கொல்லக்காடும், கொத்துக்காடும், காட்டெரிப்பு வேளாண்மை நிலங்களே அதிகமாக இருந்தன. இன்று இத்தகு விவசாயம் அரிதாகவே காணமுடிகிறது.

### 4.1.1.4. பயிர் வகைகள்

நிலத்தின் தன்மைக்கேற்ப பயிரிடுதல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. நிலத்தை உழுது எருவிட்டுப் பண்படுத்திய பின்பு செய்ய வேண்டியது ‘பயிரிடுதல்’ ஆகும். பயிரிடும்போது நிலத்தைத் தேர்வு செய்தல் முதல் நிலை என்றால், பருவம் பார்த்துப் பயிர் செய்தல் அதைவிட முக்கியமானதாகும். மலையாளிகள் மழைக் காலம், பயிருக்கு ஏற்ப தட்பவெப்பம் நிகழும் காலம் எனப் பருவகால மாற்றங்களைக் கருத்தில் கொண்டு பயிர்த்தொழில் செய்கின்றனர். மலையாளிகள் பயிரிடும் முறைகள் தானியவகைப் பயிர்கள், பயறு வகைகள், பழவகைப் பயிர்கள், எண்ணெய் வித்துப் பயிர்கள், என்று நான்கு வகையில் அமைகின்றன.

#### 4.1.1.4.1. தானிய வகைப் பயிர்கள்

மலையாளிகள் ஆரம்பக்காலம் முதல் இன்று வரை சாமை, வரகு, தினை, கேழ்வரகு, பனி வரகு, சோளம் போன்ற தானியவகைப் பயிர்களை பயிரிட்டு வருகின்றனர். அவற்றை இங்கு விரிவாகக் காண்போம்.

##### 4.1.1.4.1.1. சாமை.

'சாமை' முற்றிலும் மானாவரிப் பயிர் வகையாகும். மலையாளிகள் சமையை விதைக்கும் முன்பு அந்நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை உழுது பக்குவப் படுத்தி வைக்கின்றனர். ஆடி மாதத்தில் மழை பெய்யத் தொடங்கியதும் விதை விதைக்கத் தொடங்கி விடுகின்றனர். இது மானாவரிப் பயிர் என்பதால் தண்ணீர்ப் பாய்ச வேண்டியதில்லை. களைகளை ஆனி மாதத்தில் எடுக்கின்றனர். இந்தவகைப் பயிர்களுக்கு மாட்டின் சானத்தை உரமாகப் போடுவதால் பூச்சிகள் அதிகமாகத் தாக்குவதில்லை.

இந்தப் பயிர் நெற்பயிரின் தாளைவிட சற்றுச் சிறிதானது. சாமை அறுவடையின் போது அறுக்கப்பட்டு ஒரு கைப்பிடியளவுக்குத் தாள்களை அறுத்து வைத்திருப்பதை 'அரி' என்றும், நான்கு, ஐந்து அரியை ஒன்றினைத்துக் கட்டுவதை 'கட்டு' என்றும் மலையாளிகள் கூறுகின்றனர். இவ்வாறு கட்டப்பட்டுள்ள கட்டுகளைக் களத்திற்குக் கொண்டு சென்று கதிர்களை வானத்தைப் பார்த்தவாறு ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கின்றனர். பின்னர் அதனை ஐந்து முதல் ஏழு நாட்கள் வரை அப்படியே விட்டு விடுகின்றனர். அவ்வாறு செய்தால் சாமை தாழ்களிருந்து நன்றாக உதிர்ந்து விடுகின்றது.

பின்பு களத்தில் வட்டமாகத் தாழ்களைப் போட்டு மாடுகளைக் கொண்டு 'புணைப்பூட்டி' அதன் மேல் வட்டமாக மிதிக்கச் செய்கின்றனர். பின்னர் 'மொரம் கொண்டி'யைக் கொண்டு தாள்களை இழுத்து அலசிப் பொடுகின்றனர். அதிகமானத் தாழ்கள் இருந்தால் இரண்டு புணைகள் கட்டியும் அடிக்கின்றனர். இவ்வாறு பிரித்து எடுக்கப்பட்ட சாமை பலவிதமான உணவுப் பொருட்கள் தயாரிப்பதற்கும் பிஸ்கேட் போன்ற பொருட்களைத் தயாரிக்க பெரும் நிறுவணங்களுக்கும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. நாட்டு மருத்துவத்தில் சாமை இனப்பெருக்கத்திற்கும், சர்க்கரை நோய்களைக் குணமாக்கக் கூடிய உணவாகவும் விளங்குகி வருகிறது.

##### 4.1.1.4.1.2. வரகு

'வரகு' என்பது புன்செய்ப் பயிராகும். இது கரிசல் மண் கொண்ட குறிஞ்சி நிலத்திலும், செம்மண் கலந்த முல்லை நிலத்திலும் பயிரிடப்படுகிறது. இக்காட்சியை

“செவ்விகொள் வரகின் செஞ்சுவல் கலித்த” - குறுந். 282:1.

“……………செந்நிலப் பெருவழுதி

வானம் வாய்த்த வாங்குகதிர் வரகு” - முல்லை. 97-8

என்ற பாடலடிகளால் உணரலாம். மலையாளிகள் மலைச் சரிவானப் பகுதிகளில் கார்கால மலையின் ஈரத்தில் புழுதி மயக்க உழுது வரகு, தினை போன்றவற்றை விதைத்து வேலி அமைக்கின்றனர். வரகு வளர்ந்ததும் களையெடுத்துப் பாதுகாக்கப்படுகிறன. வளர்ந்து முதிர்ந்த கதிர்களை மேய்வதற்கு முயல், மான், மயில் போன்றவைகள் வருவதும் உண்டு. வரகு விளைந்ததும் அதன் கதிர்களை கொய்து அருவடை செய்து எருதுகளை விட்டு மிதித்துக் கதிர்களினின்று உதிர்ந்த வரகினை பெரிய பாறையில் குவித்து மலையாளியினப் பெண்கள் தூற்றி எடுக்கின்றனர். இதனை

“கவைக்கதிர் வரகின் கால்தொகு பொங்கழி

கவட்டிடப் பொருத பல்சினை உதிர்வை” - (அகம். 393:5-6)

என்ற பாடல்களும் உணர்த்துகின்றன. பின் வரகினை குதிர்களில் இட்டுச் சேமித்து வைக்கின்றனர். புதிய விளைச்சலில் கிடைத்த வரகினைத் திரிகையால் (சாமை உடைக்கும் கல்) திரித்து உமியைப் போக்கி முறத்தினால் புடைத்து உரலில் இட்டு உலக்கையால் குற்றி அரிசியாக்குகின்றனர். இத்தகைய முறைகள் இம்மக்களிடையே இன்று வழக்கொழிந்து வருவதைக் களப்பணியின் போது காணமுடிந்தது.

**4.1.1.4.1.3. தினை**

குறிஞ்சி நிலத்தின் முதன்மையான விளைப்பொருளாக ஆரம்பக் காலங்களில் தினை பயிரிடப்பட்டுள்ளது. நிலத்தை உழுதும், கிழங்குகளை உண்ண காட்டுப் பன்றிகள் முண்டிய நிலத்தை பண்படுத்தியும் தினை விதைக்கப்பட்டது. மலையாளிகள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட மலைச் சரிசான புனல் காடுகளில் கொத்துக் கருவிகளைக்கொண்டு கொத்தி புற்களை நீக்கிய பின்னர் தினையைப் பயிரிடுகின்றனர். இவை நான்கு மாதப் பயிராகும். பயிர் முலைப்பு மூட்டி வரும் காலம் முதல் அறுவடையாகும் காலம் வரை மலையாளிகள் பரண் அமைத்து பயிர்களைக் கண்காணிக்கின்றனர். யானை, பன்றி, காட்டெருமை, குரங்கு போன்ற விலங்குகளிடமிருந்தும் பறவைகளிடமிருந்து தினைப்பயிரைப் பாதுகாத்து வருகின்றனர்.

தினையில் சிறுதினை, செந்தினை என இரண்டு வகைகள் உள்ளன. தினையுடன் அவரை, துவரை, வரகு போன்றவற்றையும் கலந்து விதைப்பதுண்டு. தினைக்கதிர்கள் முற்றியவுடன் அறுத்து எருதுகளைப் பூட்டிப் போரடித்துத் தினையைப் பிரித்தெடுக்கின்றனர். தாள்களை உலற்றி மாடுகளுக்குத் தீவனமாககவும், குடிசைகள் வேயவும் மலையாளிகள் பயன்படுத்துகின்றனர்.

#### 4.1.1.4.1.4. பனிவரகு

ஆரம்பக் காலங்களில் மலையாளிகள் குறுதானிய பயிர் வகையைச் சார்ந்த பனிவரகைப் பயிரிட்டு வந்துள்ளனர். இப்பயிர் உழவுக்காட்டிலும், கொத்துக்காட்டிலும் பயிரிடப்பட்டுள்ளன. பருவமழை பொய்காமல் போனாலும் பனிவரகைப் பயிரிடுகின்றனர். இது 75 நாட்கள் கொண்ட குறுகியக் காலப் பயிராகும். அதிக விளைச்சல், அதிக ஊட்டச்சத்து, வறச்சியைத் தாங்கும் தன்மை, நோய்களைத் எதிர்த்து வளரும் தன்மை எனப் பல சிறப்பு அம்சங்கள் இவற்றிற்கு உண்டு. இது ஆடி, புரட்டாசி மாதங்களில் செம்மண், களிமண் கலந்த நிலப்பகுதியில் விதைக்கப்படுகிறது.

#### 4.1.1.4.2. பயறு வகைகள்

சவ்வாதுமலை மலையாளிகள் அவரை, துவரை, கொள்ளு போன்ற பயறுவகைகளைப் பயிரிடுகின்றனர். இவை மானாவரிப் பயிராகவும் பயிரிடப்படுகின்றன. அவரை, துவரைகளை சாமை, தினை, வரகுடன் கலந்து ஊடுபயிராக விதைக்கின்றனர். சாமை, தினை வரகுக் கதிர்கள் அறுவடைக்குப் பின்னர் பயறுகள் வளர்ந்து காய்கள் தருகின்றன. இவற்றை உணவாகவும் பயன்படுத்திக் கொள்கின்றனர். புன்செய் பயிரான ‘கொள்ளு’ மழை குறைந்தாலும், அதிகமானாலும் பயனளிக்கக்கூடியதாக இருக்கின்றது.

#### 4.1.1.4.3. பழவகைகள்

முக்கனிகள் என்று சொல்லப்படும் மா, பலா, வாழையையும், கொய்யா, எழுமிச்சை, நாவப்பழம், நாற்த்தங்காய் போன்ற பழங்கள் சவ்வாதுமலைப் பகுதிகளில் அதிகமாக விளைகின்றன. இப்பழங்களை மலையாளி இனப் பழங்குடி மக்கள் தங்களுடைய விளைநிலங்களிலும், காடுகளிலும் வளர்த்து வருகின்றனர். முக்கனியில் ஒன்றான வாழைப்பழம் பூவாழை, கற்பூரவள்ளி, மலைவாழை, பூவாழை எனப் பல வகைப் பழங்கள் இம்மலைப் பகுதிகளில் விளைகின்றன. பெரும்பான்மையான நேரங்களில் இவர்களின் உணவுத் தேவையை நிவர்த்தி செய்யக் கூடியவையாக இந்தப் பழங்கள் இருந்து வருகின்றன. மேலும் இப்பழங்களைத் தலைசுமையாகக் கொண்டு சென்று விற்று இவர்களின் பொருளாதார தேவையை நிவர்த்திச் செய்துகொள்கின்றனர்.

#### 4.1.1.4.4. எண்ணெய் வித்துப் பயிர்கள்

மலையாளி இனப் பழங்குடி மக்கள் எண்ணெய் வித்துப் பயிர்களான எள், பேய்எள், போன்றவற்றை அதிகமாகப் பயிரிடுகின்றனர். இவை மானாவரிப் பயிர் வகையைச் சார்ந்ததாகும். “மண்ணின் வளங்களுக்கு ஏற்ப நல்ல விளைச்சலைத் தரக்கூடியது. இது எளிய வகைப் பயிர். ஒரு ஏக்கருக்கு விதைப்புச் செய்ய ஒரு படி எள் போதுமானதாகும்.

இதனை ஆதிக்காலம் முதல் இன்றுவரை பயிரிட்டு வருவதாக”[6] பெருமாள் கூறுகின்றார். கார்காலத்தில் பயிரிடப்படும் இவை மூன்று மாதத்தில் அறுவடைச் செய்யப்படுகிறது.

எள்ளில் கருப்பு, வெள்ளை என்று இரண்டு வகைகள் உண்டு. கருப்பு நிறத்தில் இருக்கும் எள்ளைப் ‘பேய்எள்’ என்று மலையாளிகள் கூறுகின்றனர். எள்ளை விதைக்கும் பொழுது தனியாக விதைக்காமல் அதனுடன் சிறிது மணல் அல்லது சாம்பல் கலந்து விதைக்கின்றனர். இவ்வாறு செய்வதன் மூலம் எள் விதைகள் ஒரே இடத்தில் விழுந்து நெருக்கமாக முளைக்காமல், எள் செடிகளுக்கிடையே தேவையான இடைவெளிவிட்டு முளைக்கும். இதனால் நல்ல விளைச்சல் பெறமுடியும் என்பதால் இத்தகையத் தொழில் நுட்பத்தை மலையாளிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

எள் விளைந்தவுடன் செடிகள் பழுப்பு நிறத்தில் காணப்படும். அதன் பின்னர் அருவடை செய்கின்றனர். பிறகு களத்தைத் தூய்மை செய்து அறுவடை செய்த எள்ளை வெயிலில் இரண்டு மூன்று நாட்கள் காயவைக்கின்றனர். எள் காய்ந்த பின்னர் ஒரு மார் கையளவு கொண்ட கழிகளின் உதவியுடன் அதனை அடித்துப் பிரித்தெடுக்கின்றனர். இம்முறை மற்றவகைப் பயிர்களிலிருந்து சற்று வேறுபடுகின்றன.

**4.1.1.5. பயிரிடும் காலம்**

சவ்வாதுமலை மலையாளிகள் ஆடி மாதத்தில் தினை, சாமை, கேழ்வரகு, அவரை, துவரை, சோளம், நெல்லு போன்ற பயிர்களையும், ஐப்பசி மாதத்தில் எள், பேய்எள், கொள்ளு, ‘தனியா’ (கொத்தமல்லி), பேன்றவற்றையும், வைகாசியில் கம்பு போன்ற தானியப் பயிர்களையும் பயிரிடுகின்றனர். மலையாளிகளின் குடியிருப்புப் பகுதிகள் நீர்வளம் குறைந்த பகுதியாக இருப்பதால் பருவமழையை எதிர்நோக்கிப் பயிர்த்தொழில் செய்யப்படுகிறன. இதுபோன்று பருவக் காலத்தை நன்கு அறிந்து அவற்றின் தன்மைக்கு ஏற்ப இவர்களின் பயிரிடும் முறைகள் அமைகின்றன.

4.1.1.6. **பயிர்களைப் பாதுகாக்கும் முறை**

மலையாளிகளின் வேளாண்மையானது வானம் பார்த்த பூமியில் மழையைப் பயன்படுத்தி விவசாயம் செய்யும் முறைகளாகக் காணப்படுகின்றன. மழை இல்லையேல் இவர்களுக்கு விவசாயம் இல்லை. இம்மக்கள் இன்று இருக்கும் மலை நிலங்களில் மிகப்பெரும் பகுதிகளில் புஞ்சைப் பயிர்களைப் பயிரிடுகின்றனர். மலைநெல், மலைவாழை, பலாப் பழம் போன்றவைகளையும் ஆரியம் (கேழ்வரகு-ராகி), தினை, சோளம், அவரைப் போன்ற புஞ்சைத் தானியங்களும் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. இவைகளை விளைவிக்க இரவு பகலாகக் காவல் புரியவேண்டும். பகலில் கால்நடைகளிடமிருந்தும், பறவைகளிடமிருந்தும் பாதுகாக்க வேண்டும். இரவில் வன விலங்குகளிடமிருந்து பாதுகாக்க வேண்டும். இரவெல்லாம் கண்விழித்துச் சப்தமிட்டும், குரல்கொடுத்தும், பாடியும் காவல்

இருக்கின்றனர். இந்த நிலை மலையாளிகளின் விளைநிலங்களுக்கு மட்டுமல்ல, அனைத்து மலைவாழ் மக்களின் விவசாய நிலங்களுக்கும் ஏற்படுகின்றன என்பது ஆய்வாளர் களப்பணியில் நேரில் கண்ட உண்மை நிலையாகும்.

முலையாளிகள் தற்பொழுது இரண்டாண்டு காலமாக மரவள்ளிக் கிழங்கை அதிகமாகப் பயிரிட்டு வருகின்றனர். விவசாயப் பயிர்களைப் பறவைகளும் விலங்குகளும் சேதமாக்குவது உண்டு. அப்பொழுது சுண்டிவில், கவன்கல் போன்றவற்றைப் பயன்படுத்திப் பறவைகளை விரட்டுகின்றனர் என்பதை களப்பணியின்போது அறியமுடிந்தது. வனவிலங்குகளின் மூலம் உண்டாகும் பயிர்ச்சேதத்தினைத் தடுப்பதற்காக மலையாளிகளும் மற்ற மலைவாழ் மக்களும் இரவு நேரங்களில் விளைநிலங்களுக்குச் சென்று காவல் இக்கின்றனர். பயிர்செய்யும் இடத்திற்கு அருகில் பெரிய பாறைகள் இருப்பின் அதன்மேல் படுத்துக்கொண்டு காவல் காக்கின்றனர். இல்லையெனில் மேட்டுப்பாங்கான பகுதியில் இருந்தும் மரங்களின் மீது பரண் அமைத்து அதன் மேலிருந்து காவல் காக்கின்றனர். மிருகங்கள் வந்தால் தீ வெளிச்சத்தைக் காண்பித்தும், ஒலியெழுப்பியும் வனவிலங்குகளை விரட்டுகின்றனர். இன்றைய மலைவாழ் மக்களைப் போலவே பண்டைய குறிஞ்சி நில மக்களிடமும் இத்தகைய முறைகள் இருந்துள்ளதை பெரும்பாணாற்றுப்படை தெரிவிக்கினறது.

"வேழம் காவல் குரம்பை ஏய்ப்ப"[7]

என்ற அடி இதனை உணர்த்துகின்றது. மேலும்

"விளை புனம் நிகழ்தலின் கேழல் அஞ்சி
புழை தொறும் மாட்டிய இருங்கல் அடாஅர்
அரும் பொறி உடைய ஆறே" - ( ம.ப.க, 193:195)

என்ற வரிகளும் இதனை மெய்பிக்கின்றன. இவ்வளவு சிரமப்பட்டு விளைந்தாலும் வனவிலங்குகள் அழித்ததுப் போகக் கிடைக்கும் தானியம் காலாண்டிற்குக் கூடப் போதுமானதாக இருப்பதில்லை. மற்ற நாட்களில் வன விளைப்பொருட்களை நம்பியே காலத்தை கடக்க வேண்டியுள்ளது. பெரும்பகுதியான காலங்களில் மூன்று வேளை உணவு என்ற சூழ்நிலையே இவர்களிடம் இல்லை.

மலையாளியினப் பழங்குடிகளின் விவசாயத்தை அறிய முடிந்ததில் அந்த விவசாயம் முழுக்க முழுக்க இயற்கையைச் சார்ந்தது. அவர்கள் வனங்களை ஒட்டிய விவசாய நிலங்களில் சாமை, தினை, கேழ்வரகு, எள்ளு போன்ற பயிர்களை விளைவித்துத் தானியம் முளைப்பு முட்டி வரும் போதிலிருந்து தங்களின் வயல்களில் இரவுகளில் காவல் புரிகின்றனர். வனத்தை ஒட்டிய வயல்களில் விலங்குகள் இரவுகளில் வரும் என்று அறிந்து

வேலியைத் தங்களின் நிலங்களைச் சுற்றிலும் அமைத்துள்ளனர். மேலும் தானியப் பயிர்கள் கதிர்களாகும் காலம் வரை இரவுகளில் தங்களின் வயல்களில் உள்ள மரங்களின் மேல் பரண் அமைத்தும், சிறு குடிசில்கள் அமைத்தும் 'தீ' வளர்த்தும் இரவு முழுவதும் விழித்திருந்து விலங்குகள் தென்படும்போது சப்தம் எழுப்பியே அதனை விரட்டுகின்றனர். மலையாளியினப் பழங்குடிகளின் விவசாயத்தில் எந்தக் கானுயிருக்கும் சிறு பாதிப்பும் கிடையாது.

### 4.1.2. **வேட்டையாடுதல்**

"ஆதிகாலத்தில் மனிதன் விலங்கோடு விலங்காக வாழ்ந்து வந்த காலத்தே விலங்கைத் தாக்கி வீழ்த்தி வாழ முற்பட்ட நிலையில் வேட்டைத் தொழில் தோன்றி இருத்தல் வேண்டும். அன்று தொடங்கி இத்தொழில் காலந்தோறும் வளர்ந்து வேட்டைக் கலையாகப் போற்றுமளவிற்குச் சிறந்து விலங்குகின்றது. இக்காலத்தில் காட்டில் வேட்டைக்குச் சென்று வேட்டையாடுதல் ஒரு கலையாகவே போற்றப்பட்டிருக்கிறது. இக்கலையை வீரத்தின் விழைவு என்றே கூறுவர்"[8].

உணவுக்காக வேட்டையாடுதல் தொல் பழங்குடியினரின் அன்றாடப் பழக்கமாக இருந்தது. ஆனால், வேட்டைத் தொழில் அரசால் தடை செய்யப்பட்டதால் தற்பொழுது நடைமுறையில் இல்லை. மலையாளிகள் பத்துத் பதினைந்து வருடங்களுக்கு முன்பு வரை வேட்டைத் தொழிலில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவர்கள் குழுவாக வேட்டைக்குச் செல்வதை மரபாகக் கொண்டிருந்தனர். வேட்டை முறைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை. குழு வேட்டை, தனிநபர் வேட்டை என்பனவாகும்.

#### 4.1.2.1. **குழு வேட்டை**

மலையாளிகள் குழுவாக வேட்டைக்குச் செல்வதை மரபாகக் கொண்டிருந்தனர். வேட்டைக்குப் புறப்படும் முன்பு தங்களுடைய வேட்டை தெய்வங்களான 'வேடன்', 'வேடியப்பன்', 'மோர்நான்' போன்ற வன தெய்வங்களை வேண்டிக்கொண்டு புறப்படுவது வழக்கமாகும். வேட்டை பலித்துவிட்டால் நன்றிக்கடனாக அதன் உறுப்பின் ஒரு பகுதியை எடுத்து, சமைத்துச் சாமிக்குப் படைத்தப் பின்னரே அவர்கள் உண்டிருக்கின்றனர். மான், காட்டுப் பன்றி, கேளாடு, வரையாடு, முள்ளம்பன்றிப் போன்ற விலங்குகளை வேட்டையாடியுள்ளனர். இப்பழக்கம் பல்வேறு பழங்குடி இன மக்களிடமும் இருந்துள்ளதை பக்தவத்சல பாரதி அவர்கள் தமது பண்பாட்டு மானிடவியல் என்னும் நூலில் குறிப்பிட்டுச் செல்கின்றார். முன்பு காடும் மலையும் அனைவருக்கும் பொதுவாக இருந்தது. வேட்டைக்குச் செல்லும் மக்களும் ஒரு குழுவாகவே சென்றார்கள். மலையாளிகள் பல நாட்கள் காடுகளில் திரிந்து வேட்டையில் ஏதேனும் விலங்குகள் கிடைத்தால் அதனைக் குடியிருப்புப் பகுதிகளுக்குச் கொண்டு வந்து விலங்கின் இறைச்சியை அக்குடியிருப்பைச்

சேர்ந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் சமமாகப் பகிர்ந்துக கொடுத்துள்ளனர். இதனை பின்வரும் நற்றினைப் பாடல்களும் விளக்குகிறது.

“கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை

தேம்கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு

காந்தள் அம் சிறுகுடிப் பகுக்கும்” – (நற், 85 : 8-10)

கானவர்கள் வேட்டையாடிய முள்ளம் பன்றியின் இறைச்சியைக் கொடிச்சி தம் சிறு குடியினருக்கு மகிழ்ச்சியுடன் பகுத்துக் கொடுத்துள்ளதை இப்பாடல் வழி அறிகிறோம். பகிர்ந்து கொடுக்கும் ஒவ்வொரு கூறிலும் விலங்கின் அனைத்து உறுப்புகளும் இருக்குமாறு கொடுக்கப்படுகின்றன. வேட்டையாடியவருக்கு ஒரு பங்கோ அல்லது அதன் ஒரு உறுப்போ கூடுதலாகக் கொடுத்து விடுகின்றனர். வேட்டையில் கிடைக்கும் இறைச்சியை வேட்டையாடியவர்கள் மட்டும் அனுபவிப்பதில்லை. இத்தகைய பறிமாற்ற மரபுகள் அனைத்துத் தமிழகப் பழங்குடி மக்களும் கடைபிடித்து வரும் வாழ்க்கை முறையாக இருந்துள்ளது. யாருக்கு வேட்டை கிடைத்தாலும் அங்கு வாழும் பழங்குடி மக்கள் அனைவருமே பகிர்ந்துண்ணும் பண்புடையவர்களாக இருந்து வந்துள்ளனர். ஒருவர் பட்டினி கிடக்க மற்றொருவர் வயிறு நிரப்பி மகிழும் சிறுமைக் குணம் பழங்குடியினரிடம் காண முடியாது. இத்தகைய பண்பு மலையென இம்மக்களிடம் உயர்ந்து காணப்படுகிறது.

வேட்டையில் கிடைக்கும் மாமிசத்தை வெயிலில் உலர்த்தி ‘உப்புக்கண்டம்’ (வத்தல்) போடும் பழக்கத்தைக் கற்றிருக்கிறார்கள். ஒரு சில நேரங்களில் இரண்டு மூன்று விலங்குகளும் வேட்டையில் கிடைத்துவிட்டால் இறைச்சி முழுவதையும் குடும்பத்தினர் ஒரே நேரத்தில் உண்ண முடியாது போகும். அப்பொழுது தேவைக்கு மீதமுள்ள இறைச்சியைப் பக்குவப்படுத்தி வரும்காலத்திற்குக் பயன்படுத்தும் முறையில் அதனை பக்குவப்படுத்தி வைத்துள்ளனர். வேட்டையாடும்போது சிறிய இளம் குட்டிகளையோ, கருவுற்ற நிலையில் உள்ள விலங்குகளையோ இவர்கள் வேட்டையாடுவதில்லை.

### 4.1.2.2. **தனிநபர் வேட்டை**

மலையாளிகள் குழுவாகச் சேர்ந்து வேட்டையாடுவது மட்டுமல்லாமல் தனிநபர்களாகவும் வேட்டைத் தொழில்களைச் செய்யும் பழக்கமும் உடையவர்களாக இருந்துள்ளனர். பறவைகள், அணில் போன்ற சிறு விலங்குகளைத் தனிநபராகச் சென்று வேட்டையாடி இருக்கின்றனர். பண்டையத் தமிழர்களும் பறவைகளைக் கண்ணி வைத்துப் பிடிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்பதை

“கானக் கோழியொடு இதல்கவர்ந்து உண்டென

ஆர நெருப்பின் ஆரல் நாறத்

துடி வார்த்து இட்ட முழுவள்ளும்

இரும்பேர் ஒக்கலொடு ஒருங்கினிது அருந்தித்

தங்கினை சென்மோ பாண’’ - (புறம். 320)

என்னும் புறநானூறு பாடல் பதிவு செய்துள்ளது. மேலும் மலையாளிகள் காடை, புறா, செம்புருத்தான், கொண்டைக் குருவி, காட்டுக் கோழி போன்ற பறவைகளை வேட்டையாடியுள்ளனர். நீர் நிலைகள், அடர்ந்த காடுகள் நிறைந்த பகுதிகளில் வாழ்கிற இப்பறவைகளை வேட்டையாட கண்ணி, வலை, பிசின், உண்டிவில், கவன் கல் போன்ற வேட்டைக் கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். ‘பிசின்’ பறவைகளைப் பிடிக்க தடவப்படும் ஒருவகை ‘பசை’ ஆகும். இதனை மலையாளிகள் தங்கள் நிலங்களில் விளையக்கூடிய பலா மரத்திலிருந்தே எடுத்துள்ளனர்.

பலா மரத்தின் இளம் தொட்டுக்களைச் சிறிது கீறிவிட்டால் அதில் வடியும் பால் சிறிது நேரத்தில் தோய்ந்து விடுகிறது. அதனை எடுத்துப் பறவைகள் அதிகமாகச் செல்லக்கூடிய நீர் நிலைகள், பழமரங்கள், வயல்கள் போன்ற இடங்களில் பத்துப் பதினைந்து கிளைப்பிரிவுகளை உடைய நீண்ட ஒரு கம்பினை எடுத்து அதன் கிளைகளில், தோய்ந்த நிலையில் இருக்கும் பிசினைத் தடவி அந்தந்த இடங்களில் வைத்து விட்டு இவர்கள் அதன் அருகில் உள்ள மறைவான இடங்களில் இருக்கின்றனர். இறை தேட வரும் பறவைகள் அந்தக் கிளைகளின்மீது உட்கார்ந்து எழும் போது ‘பிசின்’ இறக்கையினையும், காலையும் இறுகப் பிடித்துக்கொள்ளும். அப்பொழுது பறவையால் மேலே பறக்க முடியாது. அங்கு மறைந்திருப்பவர்கள் விரைவாகச் சென்று அப்பறவைகளைப் பிடித்துக்கொள்கின்றனர். வனப்பாதுகாப்பின் காரணமாக வேட்டையாடுதல் தடைசெய்யப்பட்டுள்ளதால் இத்தொழிலை தற்பொழுது மறந்து வருகின்றனர்.

மலையாளியினப் பழங்குடி மக்கள் வனத்தையும் அதன் கானுயிர்களையும் தெய்வமாக வழிபடுகின்றனர். பொதுவாக, வனத்தில் கானுயிர்களை மலையாளிகள் உணவிற்காகவும், மருந்திற்காகவும் தவிர வேறு எதற்காகவும் வேட்டையாடுவது கிடையாது. குறிப்பாகக் குட்டிமான்கள், பெண்மான்கள், சினையுற்ற விலங்குகள் போன்றவற்றைக் கொல்வது தெய்வ குற்றமாகவே கருதுகின்றனர். வனவிலங்குகளை உணவிற்கான வேட்டையில் அழிப்பது கிடையாது. வணிக நோக்கத்திற்கான பேராசையின் காரணமாக நிகழும் வேட்டைகளாலேயே அழிவை எதிர்கொள்கின்றன.

### 4.1.3. வனப்பொருட்கள் சேகரித்தல்

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்புவரை மலையாளிகளின் பொருளாதாரம் வனங்களில் இருந்து சேகரிக்கப்படும் பொருட்களை மையமாகக்கொண்டு அமைந்திருந்தது. மனிதப் பயன்பாட்டிற்காக இயற்கைக் காடுகளிலிருந்து சேகரிக்கப்படும் அனைத்து

உயிரினப் பொருள்களும் வனப் பொருள்களாகும். மலையாளிகள் உணவு, மருந்து, சுவையூட்டி, எண்ணெய் வித்துக்கள், மரப்பிசின், மரவடி திரவம், மரப்பால், பட்டை, சாயப்பொருள், அழகுக்கான தாவரங்கள், வனவிலங்குகள், விறகு, மூங்கில், சிறிய மரக்கட்டைகள், பிரம்பு, நார் போன்ற மூலப்பொருட்களை வனங்களிலிருந்து சேகரிக்கின்றனர். ஈரப்பதம் மிகுந்த வெப்பக் காடுகளில் இத்தகைய பொருட்கள் அதிகமாகக் கிடைக்கின்றன.

இப்பொருள்கள் பழங்குடி மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் பெரும்பங்கு வகிக்கின்றன. வாணிகத்திலும் இவைகள் முக்கியமானவைகளாக இருக்கின்றன. தென்கிழக்கு ஆசியப் பகுதிகளில் ஏறக்குறைய 29 மில்லியன் வனவாசிகள் இருப்பதாகவும், இவர்களில் பெரும்பான்மையான பழங்குடி மக்கள் வன வளங்களை நம்பி வாழ்ந்து வருவதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். வனப்பொருள்கள் வருமானத்தைக் கொடுப்பதோடு வேலை வாய்ப்பையும் கொடுக்கின்றது. பழங்குடி மக்கள் உண்ணும் உணவில் பெரும் பகுதி வனப் பொருள்களாகவே முன்பு இருந்தன. இவற்றின் மூலமாக இம்மக்களுக்குப் போதிய அளவு புரதம், வைட்டமின், போன்ற சத்துக்களும் கிடைத்தன. இவ்வின மக்கள் சேகரிக்கும் வனப்பொருட்களுள் கிழங்குகள், கொட்டைகள், காய்கள், தேன் போன்றவைகள் முக்கியமானவை ஆகும். இவற்றை ஆண்டு முழுவதும் சேகரித்தாலும் சில மாதங்களில் மட்டும் அதிக அளவில் சேகரிக்கின்றனர். இதற்கு இரண்டு விதமான காரணங்கள் கூறப்படுகின்றன. அவை,

1. வேனிற்காலத்தில் மண் அதிக கடினத் தன்மையுடன் இருப்பதால் தோண்டுவதற்குக் கடினமாக இருக்கும்.
2. மழைக் காலங்களில் மண்ணின் தன்மை இலேசாக இருக்கும் என்றும் கிழங்குகளை எளிமையாகத் தோண்டி எடுக்கலாம் என்றும் கூறுகின்றனர்.

#### 4.1.3.1. கிழங்குகள்

மலையாளியின பழங்குடி மக்கள் வனங்களிலிருந்து சேகரிக்கப்படும் பொருள்களுள் மிகவும் முக்கியமானது கிழங்கு வகைகள் ஆகும். இதனைத் தனிநபராகவும் குழுவாகவும் சென்று சேகரிக்கின்றனர். இவர்களால் சேகரிக்கப்படும் கிழங்குகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. வள்ளிக் கிழங்கு
2. முள்வள்ளிக் கிழங்கு
3. கவலைக் கிழங்கு
4. ஈச்சங் கிழங்கு
5. கூந்தன் கிழங்கு
6. காளான்

7. மாவள்ளிக் கிழங்கு

போன்றவைகள் ஆகும். இவற்றை சேகரிக்க இவர்கள் காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரிகின்றனர். அவ்வாறு கிடைத்த கிழங்கினை நிலத்தில் ஆழமாகத் தோண்டி எடுக்கும்போது ஒருவருக்கொருவர் ஒத்துழைப்போடு கூட்டாக செயல்படுகின்றனர். பண்டைய குறிஞ்சி நிலத்தவர்களும் கவலைக் கிழங்கை அகழ்ந்துண்டனர் என்றும் அவ்வாறு அகழ்ந்த குழியில் ஒரு கானவன் மணியைப் பெற்ற செய்தியைக்

“கவலைக் கொண்டிய அகழ்வாய்ச் சிறுகுழி” – (குறுந், ப.எ.233:1)

என்ற குறிப்பின்வழி அறியமுடிகின்றது. மலையாளிகள் கிடைத்த கிழங்கினை அனைவரும் பகிர்ந்து கொள்கிறார்கள். தை மாதத்திலிருந்து ஆடி மாதம் வரை இவர்களின் பிரதான உணவாக ‘இருளங்கிழங்கு, கவலைக்கிழங்கு, காளான் போன்றவைகள் இருக்கின்றன. நிலத்தில் ஆழமாகத் தோண்டி எடுக்கும் கிழங்கை நெருப்பில் சுட்டும் பின் மேல் தோலை எடுத்து விட்டும் உண்ணுகிறார்கள். வேகவைத்துச் சாப்பிட விரும்புவோர் மண்பானையில் நீர்விடாமல் கிழங்கை மட்டும் அடுப்பில் வைத்து சிறிது உப்புப் போட்டு வேக விடுகிறார்கள். கிழங்கில் உள்ள நீரிலேயே வெந்து விடுகிறது. பிறகு வேகவைத்த கிழங்கைச் சாப்பிடுகிறார்கள்.

பெரும்பாலன நேரங்களில் வெறும் கிழங்கையே உணவாக உண்ணுகிறார்கள். தயிர்க் கிடைத்தால் தயிரிட்டுக் கிழங்கைப் பிசைந்து சாப்பிடுகிறார்கள். தேன் கலந்தோ, வெல்லம் சேர்த்தோ உண்ணும் பழக்கமும் உள்ளது. மழைக்காலம் தொடங்கும் ஆடிமாதம் முதல் தை வரை கிழங்கு வளரும் காலமாகும். மழைக்காலங்களில் கிழங்கு வளர்ந்தாலும் உண்ணுவதற்கு ஏற்றதாக இல்லாமல் வழவழப்பாக உள்ளதால் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதில்லை. கிழங்கைத் தோண்டி எடுத்தவுடன் கொடியை அதன் குழியிலேயே வைத்து நட்டுவிடுகின்றனர். அவ்வாறு செய்வதால் அக்கொடி அழிக்கப்படாமல் மறு உற்பத்திக்குப் பயன்படுகிறது என்று கூறுகின்றனர்.

மாவள்ளிக் கிழங்கினை எடுத்து வந்து பரண்களின் மேல் இரண்டு மூன்று நாட்களுக்கு உலற்றுகின்றனர். அவ்வாறு செய்வதால் அதிலுள்ள பால் வற்றி விடுகிறது. அந்தக் கிழங்கிணை உப்புச் சேர்த்த மோரில் கலந்து ஒரு வாரத்திற்கு ஒரு சட்டியில் போட்டு ஊறவைக்கின்றனர். பின்னர் காய்ந்த மிளகாய் அளவாக எடுத்து எண்ணெய்யில் இட்டுத் தாளித்து அதனுடன் கலந்து ஒரு அற்புதமான மாவள்ளிக் கிழங்கு ஊறுக்காயைத் தயார் செய்கின்றனர். கிழங்குக் கொடிகளையும், இலைகளையும் மருந்தாகவும் பயன்படுத்துகின்றனர்.

கூந்தன் மட்டைகள் விழாக்காலங்களில் பந்தல் அமைக்கவும், அதன் குழைகள் பந்தலை அழகு செய்யவும் தொங்கவிடப் பயன்படுகின்றன. ஈச்சம் புல் வீடுகளின் மேல்

கூறை அமைக்கவும், வீடுகள் சுத்தம் செய்யும் துடப்பமாகவும் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு பழங்குடி மக்கள் வனங்களிலிருந்து சேகரிக்கப்படும் ஒவ்வொரு பொருள்களும் பலவகைகளில் பயன்தரக்கூடியதாகவும், அதனைப் பயன்படுத்தும் வகையிலும் தங்களுடைய வாழ்க்கையை முறைகளை அமைத்துக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

### 4.1.3.2. தேனெடுத்தல்

சவ்வாது மலை மலையாளிகளின் முக்கியத் தொழில் தேனெடுத்தல் ஆகும். இவர்கள் உயரமான மரங்களிலும், பெரிய பாறைகளிலும் மரபொந்துகளிலும், பாறை இடுக்குகளிலும் தேனெடுப்பதைத் ‘தேனழித்தல்’ என்று கூறுகின்றனர். இவர்கள் ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்டு மாதம் வரையுள்ள காலக்கட்டங்களில் தேன் சேகரிக்கும் தொழிலில் ஈடுபடுகின்றனர். தேன் மானுட வாழ்வில் பல்வேறு மருத்துவ முறைகளுக்கும் உடல் நலத்தைப் பாதுகாக்கவும் பயன்படுகின்றது. இவர்களால் அழிக்கப்படும் தேன் நான்கு வகையில் அமைகிறது. அவை

1. கொசுத்தேன்,
2. கொம்புத்தேன்,
3. கிழத்தேன்,
4. பெருந்தேன் (அ) மலைத் தேன் போன்றவைகள் ஆகும்.

#### 4.1.3.2.1. கொசுத்தேன்

இத்தேன் மர முகடுகள், பாறை இடுக்குகள், வீட்டுச் சுவர் போன்றவற்றில் இருக்கும். இது கொசுப்போன்று சிறுசிறு ஈக்களைக் கொண்டிருப்பதால் இதனைக் ‘கொசுத் தேன்’ என்றும் கூறுகின்றனர். இவற்றிலிருந்து 10 கிராம் முதல் 250 கிராம் வரை தேன் கிடைக்கின்றது.

#### 4.1.3.2.2. கொம்புத்தேன்

மரக்கிளைகள், செடிகள், கொடிகள், பாறை இடுக்ககளில் கிடைக்கும் தேன் ‘கொம்புத் தேன்’ என்று கூறுகின்றனர். இதன் ஈக்கள் கொசுத்தேனின் ஈக்களை விடப் சற்றுப் பெரிதாக இருக்கும். இவற்றிலிருந்து 100 கிராம் முதல் 1500 கிராம் வரையிலும் தேன் கிடைக்கின்றது.

#### 4.1.3.2.3. கிழத்தேன்

மரப்பொந்துகள், புற்றுகள், சாதாரணப் பாறை இடுக்குகளில் இருப்பது ‘கிழத்தேன்’ ஆகும். இத்தேனைப் பகல் பொழுதில் அறுத்தெடுக்கின்றார்கள். இந்தத் தேன்கூடு மரப்பொந்துகளில் இருக்கும்பொழுது, முதலில் ஒரு சிறு குச்சியை கூட்டினுள் நுலைத்துத் தேன் இருக்கின்றதா? இல்லையா? ஏன்பதை உறுதி செய்கின்றனர். தேன் இருப்பது

உறுதியானால் பொந்தினுள் கையைவிட்டுத் தேன் எடுக்கின்றனர். சில சமயம் மரப்பொந்துகளின் நுழைவாயில் குறுகியதாக இருக்கும். அப்பொழுது மரத்தை கைபோகும் அளவுக்கு வெட்டி எடுத்துவிட்டு பின்னர் தேன் எடுக்கின்றனர். ஒருபோதும் மரங்களை வெட்டி சாய்த்துத் தேன் எடுப்பதில்லை. தேன் எடுத்து முடிந்தவுடன் பொந்துகளைத் தேனீக்கள் போகும் அளவுக்கு இடைவெளிவிட்டு கல்வைத்து மூடிவிடுகின்றனர். அவ்வாறு செய்வதால் ஊறும் விலங்குகள் தேனிக்களை அழித்துவிடாமல் பாதுகாக்க முடியும் என்கின்றனர். மேலும், மறு உற்பத்தி செய்வதற்கும் இம்முறை பின்பற்றப்படுவதாகவும் கூறுகின்றனர். இவற்றிலிருந்து எடுக்கப்படும் தேன் இரண்டு முதல் ஐந்து லிட்டர் வரை கிடைக்கின்றது.

4.1.3.2.4. **பெருந்தேன்** (அ) **மலைத்தேன்**

பெருந்தேன் உயர்ந்த மரங்களிலும், பெரிய பாறைகளிலும் மட்டுமே இருக்கும். இத்தேனை எடுக்க இரண்டிற்கு மேற்பட்டவர்கள் செல்கின்றனர். இவற்றின் ஈக்கள் நீர், சேர், பூக்கள் போன்றவற்றை எடுத்து தேன் கூட்டைக் கட்டுகின்றன. மலையாளிகள் காடுகளிலுள்ள நீர் நிலை, சுனை, குட்டை, பூக்கள் உள்ள இடங்களுக்குச் சென்று தேனீக்கள் எந்தத் திசையை நோக்கி செல்கின்றன என்று நன்கு உற்றுப் பார்க்கின்றனர். இதனைப் 'பூச்சி பார்த்தல்' என்று கூறுகின்றனர். பின்னர் அவ்விடத்திலிருந்து ஈக்கள் சென்ற தீசையை நோக்கி சிறு சிறு இடைவெளி விட்டு ஒவ்வொரு மரத்தின் கிளைகளையும் அண்ணாந்து பார்த்த வண்ணம் செல்கின்றனர். இதனை 'மேனை பார்த்தல்' என்கின்றனர். இவ்வாறு இவர்கள் பல்வேறு சிரமங்கள்பட்டுக் காடுகளில் அலைந்து திரிந்த பிறகே தேன் கூடுகள் அகப்படுகின்றன. ஒரு சில நேரங்களில் விரைவாகவும், இரண்டு, மூன்று தேன் கூடுகளும் கிடைப்பதும் உண்டு. முதலில் தேன் கூட்டைக் காண்பவர்கள் 'டும்' என்று ஒரு சப்த ஒலியை எழுப்புகின்றனர். ஒலியைக் கேட்டவுடன் அருகில் இருப்பவர்கள் அவ்விடத்திற்கு வந்துவிடுகின்றனர். இந்த ஒலிப்பு முறையைத் தேன் எடுக்கும் போது மட்டுமே பயன்படுத்துகின்றனர். பிற இடங்களில் பயன்படுத்துவது இல்லை.

### 4.1.3.3. தேன் எடுக்கும் முறைகள்

மலையாளிகள் உயரமான மரத்தின் மேலிருக்கும் தேன் கூடுகளை எடுப்பதற்குக் காய்ந்த புற்கள், சுள்ளிகள் போன்றவற்றை சேர்த்து நீண்ட ஒரு தடியின் நுனிப்பகுதியில் பெரிய பந்து போன்று இறுக்கமாகக் கட்டுகின்றனர். இதனைச் **'சூட்டை'** என்றும் **'சுழந்தை'** என்றும் கூறுவர். பின்பு அவற்றின் நுனிப்பகுதியில் தீ வைத்துப் புகையை உண்டாக்கி அவை தேன் கூட்டில் படுமாறு காட்டுகின்றனர். புகை தேன் கூட்டில் பட்டவுடன் தேனீக்கள் மேலே பறந்துவிடுகின்றன. பின்னர் மலையாளிகள் தான் வைத்திருக்கும் பாத்திரத்தில்

தேனைப் பிழிந்து எடுத்துக்கொள்கின்றனர். முற்காலத்தில் இதற்குச் சுரைப்புருடை பயன்படுத்தியுள்ளனர். சிறிய தேன்கூடாக இருந்தால் ஐந்து லிட்டருக்குக் குறைவாகவும், பெரியதாக இருந்தால் பதினைந்து லிட்டருக்கும் அதிகமாகவும் தேன் கிடைக்கும். தேன் கூட்டில் தேன் இருக்கும் பகுதியை 'நேப்பு' என்றும், 'பூக்கட்டி' என்றும், தேன் அடையை 'இராடு' என்றும், கூறுகின்றனர். தேன் சேகரிக்கும் நாட்களில் இவைகளே இவர்களின் உணவாகவும் அமைகிறது. இவ்வாறு தேன் எடுப்பதன் மூலம் தேனீக்கள் அழிக்கப்படாமல் காக்கப்படுகின்றன. உச்சி வெயில், எதிர் வெயிலில் தேன் எடுக்கக் கூடாது என்றும் அவ்வாறு எடுத்தால் தேனீக்கள் கொட்டிவிடும் என்றும் மலையாளிகள் நம்புகின்றனர்.

மலையாளிகள் முன்பு வேறு காரணத்திற்காகச் காடுகளுக்குச் சென்று தேன் கூட்டைக் கண்டால் கண்டவர் அடையாளத்திற்காகத் தழையை (இலை) ஒரு கொத்தாக ஒடித்து வைத்துவிட்டு வருகின்றனர். அதை மற்றவர்கள் கண்டால் தேன் இருப்பதை அறிந்து கொள்வர். ஆனால் தேனை முதலில் பார்த்தவரே எடுப்பார். மற்றவர்கள் அதை எடுக்கும் பழக்கம் இல்லை. அதே போல் மலைப்பகுதியில் தேனெடுக்கும் குடும்பம் தொடர்ந்து அப்பகுதியில் தேனை எடுக்கவேண்டும். வேறு பகுதியைச் சேர்ந்தவர்கள் அதைத் எடுக்கமாட்டார்கள். எந்தெந்தக் குடும்பம் எங்குத் தேனெடுக்கிதோ அங்கு அதைத் தொடர்ந்து எடுக்கும் பழக்கம் உள்ளது. தேனெடுக்கத் தொடங்கும்முன் கடவுளை வழிபடுகிறார்கள். நல்ல குறியாக விடைகொடுத்தால் மட்டுமே தேனெடுப்பர். கெட்ட சகுன அறிகுறி தெரிந்தால் தேனெடுப்பதைத் தவிர்த்து விடுகிறார்கள்.

மலை உச்சிகளில் உள்ள பெரிய பாறைகளில் இருக்கும் மலைத்தேனை இரவு நேரங்களிலேயே எடுக்கின்றனர். அங்கே நடந்து போய் யாரும் தேனெடுக்க இயலாது. எனவே, கொடிகளால் (தாவரக்கொடி) ஏணிபோன்று பின்னல் செய்து (இதை மால் என்று சொல்லுகிறார்கள்) பாறை இடுக்குகளில் கட்டி அதில் இறங்கி தொங்கிய நிலையில் ஆடியபடியே தேன் எடுக்கின்றனர். இஃது ஒரு ஆபத்தான தொழிலாகும். இது போன்று தேனெடுக்கும் முறை சங்க காலத்திலும் இருந்துள்ளதை

''கலைகை யற்ற காண்பி னெடுவரை

திலைபெய் திட்ட மால்புநெறி யாகப்

பெரும்பயன் றொகுத்த தேங்கொள் கொள்ளை'' - (ம.ப.க. பா.எ.315-17) என்ற வரிகளின் வழியாக அறியமுடிகின்றன. இப்பாடலில் சுட்டப்பட்டுள்ள 'தேங்கொள் கொள்ளை' செங்கம் கனவாய்க்கு கிழக்கே உள்ள மலைக்குன்றே ஆகும். அவை இன்றும் அப்பெயரிலேயே அழைக்கப்பட்டு வருவதையும் கள ஆய்வின்போது காணமுடிந்தது. இப்பகுதியில் தேன் எடுப்பவர்கள் இன்றும் **'மால்'** கட்டி தேனெடுத்து வருவதாகக் கூறுகின்றனர். தேன் எடுப்பவர்கள் உடன் தீப்பந்தம், சுரைக்குடுக்கை, கத்தி, மழு (மழுவு)

சாக்குப்பைப் போன்றவற்றை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சுரைக்குடுக்கைகளில் தேனைச் சேகரிக்கின்றார்கள். தேனெடுத்து முடிந்த பின்னர் கடவுளுக்குத் தேன், கிழங்குப் போன்றவற்றை வைத்துப் படைத்தப் பின்னரே உண்பார்கள்.

மால் கட்டும்போது இவர்கள் மிக எச்சரிக்கையுடன் இருக்கின்றார்கள். தனது முன்னோர்களையும், கடவுளையும் நெஞ்சில் நினைத்து வணங்கிய பின் மாலில் இறங்குகிறார்கள். எலி போன்ற பிராணிகள் அந்தக் கயிற்றைக் (கொடி) கடித்துவிடலாம். அல்லது பொறாமை, பகை உள்ளவர்கள் தேனெடுக்கும் போது அறுத்துவிட்டால் அதல பாதாளத்தில் விழுந்து உடல் சிதறி இறக்க நேரிடும்.

### 4.1.3.4. தேனெடுக்கச் செல்வோரின் உறவு முறைகள்

மலையாளிளினப் பழங்குடிகள் தேனெடுக்கும்போது தம் உடன் பிறந்த சகோதரர்களைக் காவலுக்கு வைத்துக்கொள்வதில்லை. மனைவியின் உடன் பிறந்த சகோதர்களான மாமன் மைத்துனர்களையே பாதுகாப்புக்காகக் காவல் வைக்கின்றனர்.

இதற்கான காரணத்தை விளக்கும் கதை ஒன்றும் இவர்களிடத்திலே கூறப்படுகிறது. “இருளர் இனத்தில் ஏழுபேர் அண்ணன், தம்பிகள் இருந்தனர். பெரியவன் பெயர் பெரியண்ணன். கடைசியாகப் பிறந்தவன் சின்னண்ணன். இவர்கள் ஏழு பேரில் சின்னண்ணன் விவேகமாக வீரனாக இருந்தான். வேட்டையாடுவதிலும் தேன் எடுப்பதிலும் வல்லவன். அந்தக் கூட்டத்தில் உள்ள அனைவரின் நலனிலும் அக்கறைக் கொண்டவனாகவும் இருந்தான். இவனது சிறந்த பண்பால் எல்லோராலும் உயர்வாக மதிக்கப்பட்டான். இவனுடைய அண்ணிமார்களும் சின்னண்ணனிடம் அன்பும் பாசமும் அதிகமாகப் பொழிந்தார்கள். அந்தச் சமூகத்தினர் அனைவரும் சின்னண்ணனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் கண்ட அவனது உடன் பிறந்த ஆறு அண்ணன்மார்களும் பொறுத்துக்கொள்ள முடியாமல் பொறாமை கொண்டார்கள். எனவே, பெரியண்ணன் சின்னண்ணனைக் கொன்றுவிட எண்ணினான். இதற்கு அவனது சகோதரர்கள் அனைவரும் உடன்பட்டனர். ஒருநாள் தேனெடுக்க மால்கட்டும்படி சின்னண்ணனிடம் கூறினான் பெரியண்ணன். அண்ணன் பேச்சுக்கு மறுப்பு கூறாத பண்புடைய சின்னண்ணன் மாலுடன் தேனறுத்தான். தேனெடுத்து முடியும் தருவாயில் அண்ணன்மார்கள் மாலை (மால்) அறுத்துவிட்டார்கள். பெரும் பாதாளமான பள்ளத்தில் மாலுடன் தம்பி சின்னண்ணன் வீழ்ந்து உடல் சிதறி இறந்தான்”[9]. அன்றிலிருந்து இருளர் பழங்குடி மக்கள் உடன் பிறந்த சகோதரர்களைக் காவலுக்கு வைத்துக்கொள்ளும் பழக்கத்தைக் கைவிட்டு மனைவியின் உடன்பிறந்த மாமன் மைத்துனர்களைக் காவலுக்கு வைத்துக்கொள்ளும் முறையைக் கடைப்பிடிப்பதாகக் கூறுகிறார்கள். அவர்களைப் போலவே தன் உடன்பிறந்தவர்களும் செய்துவிடுவார்கள் என்று பயத்தின் காரணமாக வைத்துக்கொள்வதில்லை என்று கூறுகின்றனர். இன்றைக்கும் இதே பழக்கம் நடைமுறையில் உள்ளது. தன் சகோதரி

விதவை ஆவதை எந்தச் சகோதரனும் விரும்பமாட்டான். அதனாலையே மனைவியின் சகோதரர்களைக் காவலுக்கு வைத்துக்கொள்கிறார்கள்.

தேன், கிழங்கு, சீங்கப்பூ, சுண்டைக்காய் மற்றும் காய்கனி இவர்களது உணவாகும். ‘கள்ளி முள்ளியான்’ (சிறிய கற்றாழை போன்ற) என்ற ஒருவகைத் தாவரத்தைப் பச்சையாகவோ வேகவைத்தோ சாப்பிடுகிறார்கள். மூங்கில், குருத்துகளையும் உண்ணுகிறார்கள். மலைநெல் கிடைக்கும்போது பயன்படுத்திக்கொள்கிறார்கள். காட்டில் கிடைக்கும் காய்கனி, தேன் மற்றும் பொருட்களை வனத்தை ஒட்டி வாழும் ஊர்களுக்குச் சென்று விற்றுவிட்டு அதற்குப் பதிலாக உணவு தானியங்களைப் பெற்று வருகிறார்கள். கிராமங்களில் உள்ளவர்களிடம் பழைய துணிகளைப் பெற்றுப் பழந்துணிகளை அணியும் பழக்கமே பெரும்பாலான பழங்குடி மக்களிடம் இன்றும் உள்ளது. இருளர்களின் குழந்தைகள் போர்வைக் கூட இல்லாமல் இருக்கின்றார்கள். பிறந்த மேனியாய் இருக்கும் குழந்தைகள் குளிரைத் தாங்கிக்கொள்ள தரையில் மண்ணைக்கிளறி அதில் படுத்துறங்குகிறார்கள். மண்ணைப் பறித்து அல்லது கிளறி படுத்து அந்த மண்ணின் சூட்டில், கதகதப்பில் குளிரைத் தாங்கிப் பழக்கப்படுத்திக்கொண்டுள்ளனர். இந்தப் பரிதாபகரமான நிலை தொல் பழங்குடியினரிடையே இன்றும் நிலவுகிறது.

மலைபகுதிகளுக்கு வரும் வியாபாரிகள், வனங்களில் கிடைக்கக் கூடிய தேன், கிழங்குகள், பழங்கள், காய்கள், கொட்டைகள், பட்டைகள், மூலிகைகள், நார்கள், காட்டுப் புற்கள் போன்றவற்றைப் பழங்குடியினர் மூலம் சேகரிக்கச் செய்து அவர்களுக்குச் சொற்ப பணம் கொடுத்துப் பெற்றுச் செல்கின்றனர். மலையாளிகள் காடுகளில் உள்ள காய், கனிகளை எடுக்கும் போது மரம், செடி, கொடிகளை வெட்டி எடுப்பதில்லை. பலனை மட்டும் எடுப்பதால் அதன் வளம் மேலும் வளர்ச்சி பெறுகிறது. இவைகள் அழிக்கப்பட்டால் இவர்களின் வாழ்வாதாரமும் கேள்வியாகிவிடும்.

#### 4.1.3.5. விறகு வெட்டுதல்

மலையாளி இனப் பழங்குடி மக்கள் காட்டுப்பகுதிகளுக்குச் சென்று விறகுகளை வெட்டி சமவெளிப் பகுதிகளுக்குக் கொண்டு சென்று பண்டமாற்றாகப் பொருள் வாங்கி வருகின்றனர். இவ்வழக்கம் பண்டைய நாளிலும் இருந்தமையை கீழ்கானும் புறப்பாடல் அடியால் அறியலாம்.

‘‘விறகுஒய் மாக்கள் பொன்பெற் றன்னதோர்’’ (புறம். 70-17)

### 4.1.4. ஆடுமாடுகள் மேய்தல்

மலையாளியினப் பழங்குடி மக்கள் வேளாண்மை செய்தலுடன் அவற்றிற்கு உறுதுணையாக இருக்கும் ஆடு, மாடுகளை மேய்க்கும் தொழிலிலும் ஈடுபடுகின்றனர்.

இவர்கள் தங்களின் செல்வங்களாக ஆடு, மாடுகளைக் கருதுகின்றனர். மாடுகள் நிலங்களை உழுவது, நிலத்திற்கு வேண்டிய எருவைத் தருவது, புணைபூட்டிக் கதிர்களை அடிப்பது, பால், தயிர், மோர் போன்றவற்றிற்குப் பயன்படுவது மற்றும் பொருளாதாரம் போன்றவற்றில் இன்றியமையனவாக விளங்குகின்றன. ஆடுகளில் வெள்ளாடு, செம்மறியாடு என இரண்டு வகையான ஆடுகளை வளர்க்கின்றனர். இவைகள் விழாக்காலங்களில் பலியிடுவதற்கும், இவற்றின் சாணம் நிலங்களில் எருவாகவும், திருமணம் போன்ற வீட்டுச் சடங்குகளுக்குப் பொருளாதார தேவையை நிறைவு செய்வதற்க்கும் ஆடுகள் பயன்படுகின்றன.

### 4.1.5. பிற தொழில்கள்

மலையாளிகள் காடுசார்ந்த தொழில்கள் மட்டும்மின்றி அருகிலுள்ள நிலக்கிழார்களின் நிலங்களில் விவசாயக்கூலி வேலை செய்வதையும் முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளார்கள். மேலும், நிலக்கிழார்களின் ஆடுமாடுகளை மேய்த்தல் தொழிலையும் செய்து வருகின்றனர். ஒருசிலர் காடுகளில் கிடைக்கக் கூடிய நார் பொருட்களை சேகரித்துக் கயிறு திரித்தல், கூடை முடைதல் தொழில்களையும் செய்து வருகின்றனர். சில சமயம் மற்றவர்கள் காட்டிற்குச் சென்று அவர்களுக்குக் காட்டு வேலைகளில் உதவிகளைச் செய்து, பின்னர் அவர்களைக் கொண்டு தங்கள் காட்டுவேலையை முடித்துக்கொள்கிறார்கள். இம்மக்களிடையே உழைப்புத் தொழில்கள் ஒருவொருக்கொருவர் கைமாற்றாகவும் செய்து வருகின்றனர்.

### 4.1.6. தொழில் முறைகளில் பெண்களின் பங்கு

மலையாளி இன ஆண்கள் காட்டு வேலையில் ஈடுபடும் போது அவர்களுக்கு உதவியாக மனைவி, பிள்ளைகளும் துணை புரிகின்றனர். பெண்கள் பாதிக்கும் மேல் ஆண்களின் உழைப்பில் பங்கு கொள்கிறார்கள். குறிப்பாகச் சமைத்தல், விறகு சேகரித்தல், கிழங்கு சேகரித்தல், களை எடுத்தல், ஏறு ஓட்டுதல் ஆகிய தொழில்களையும் பெண்கள் செய்து வருகின்றனர்.

வீட்டு வேலைகள் முடிந்தவுடன் பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து காட்டிற்குச் செல்கின்றனர். அவ்வாறு செல்லும்போது குழந்தைகள் இருப்பின் கல்யாணம் ஆகாத வளர்ந்த மகளிடமோ அல்லது வீட்டிலுள்ள முதியவர்களிடமோ கொடுத்துவிட்டுச் செல்லுகின்றனர். இதனால்தான் பகல் நேரங்களில் மலையாளிகளின் குடியிருப்புகளுக்குச் செல்லும்போது வயது முதிர்ந்தவர்களையும், குழந்தைகளையும் தவிர வேறு யாரையும் பார்க்க முடிவதில்லை. ஆண்களுடன் பெண்கள் காட்டிற்குச் சென்று தேன், கிழங்கு, பழங்கள், மூலிகைகள், விறகு போன்றவற்றை சேகரிக்கின்றனர்.

### 4.1.7. தொழில் கருவிகள்

சவ்வாது மலைப் பழங்குடி இன மக்கள் வேளாண்மைத் தொழிலில் தங்களின் மூத்தோர் பயன்படுத்திய மரக்கருவிகளையும், நவீன எந்திரக் கலப்பைகளையும் பயன்படுத்தி வருகின்றனர். மரத்தாலான உழவுக் கருவிகளைச் செய்வதற்குத் தங்கள் முன்னோர் கண்ட முறையையே இப்பழங்குடி மக்கள் இன்றும் பயன்படுத்தி வருகின்றனர். மலையாளிகள் பயன்படுத்தும் உழவுக் கருவிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். அவை

1. கலப்பை
2. நெகித்தடி (நுகத்தடி)
3. மோழி
4. கொண்டி (இரும்பு)
5. கயிறு (கலப்பைக் கயிறு)
6. மொலையாணிக்குச்சி
7. பூட்டு
8. சந்துலி
9. கடக்குச்சி
10. ஏர்கால்
11. பரம்பு
12. மாடு, எருது
13. உழக்கோல்
14. பரம்பு சங்கிலி

மேற்கண்ட ஏர் கருவிகளைக் கொண்டு மலையாளிகள் உழவுத் தொழிலைச் செய்து வருகின்றனர்.

பண்டைய காலங்களில் பெண்கள் தோண்டு கழிகொண்டு தோண்டி அதன் மூலமாக நிலத்தைப் பண்படுத்தி விதைத்துப் பயிர்செய்து வந்துள்ளனர். இந்நிலை பயிர்த் தொழிலுக்கான முறையான கருவிகள் கண்டுபிடிக்கும் வரை தொடர்ந்தது.

#### 4.1.7.1. கலப்பை

உழவுத் தொழிலின் இன்றியமையாத கருவி கலப்பையாகும். சங்க இலக்கியத்தில் கலப்பை என்று கூறப்படுகின்றது. அது யானையின் வாயைப் போன்றும் கொழு உடும்பின் முகம் போன்றும் தோற்றம் கொண்டு அமைந்தது என்று பத்துப்பாட்டு நூலான பெரும்பாணாற்றுப்படைக் கூறுகின்றது. இதனைப் “பிடிவாய் அன்ன மடிவாய் நாக்கில்” என்ற வரியால் அறியலாம். இக்கலப்பை நிலத்தில் இருக்கும் மேல்மட்ட மண்ணைத் திறந்து இலகுவாக்குவதற்குப் பயன்படுகிறது. இந்தக் கலப்பை பொரிசு மரம், காசாமரம், வேலமரம் போன்றவற்றால் மலையாளிகளே உருவாக்கப்படுவதாகும். இந்த மரங்களில் கலப்பை செய்வதால் நீண்ட நாட்கள் செல் அரிக்காலும், தேய்மானம் ஆகாமலும் இருக்கும் என்று மலையாளிகள் கூறுகின்றனர். இதன் கீழ்ப்பகுதி கூர்மையாக இருக்கும்.

#### 4.1.7.2. நெகித்தடி (நுகத்தடி)

நுகத்தடி மாடுகளின் கழுத்தில் வைக்கப் பயன்படும் கருவியாகும். இதன் நீளம் 5 முதல் 6 அடி அளவு கொண்டதாகவும், உருண்டை வடிவத்திலும் காணப்படும். நுகத்தடியின் இரு புறங்களிலும் ஒரு அடி அளவுகளில் துளைகள் போடப்பட்டிருக்கும். அந்தத் துளைகளில் பூட்டை நுழைத்து மாடுகளின் கழுத்தில் கட்டுகின்றனர். நுகத்தடியின் மையப்பகுதியில் 'ஏர்கால்' முனையை வைத்துக் கட்டுவதற்கு ஏற்றவாரு ஒரு அடையாளம் வைக்கப்பட்டிருக்கும். அடையாளம் வைக்கப்பட்ட இடத்தில் ஏர்காலைக் கட்டினால் தான் இருமாடுகளும் சரி சமமாக இழுத்துச் செல்வதற்கு எளிதாக இருக்கும். சரியாகப் பொருந்தவில்லையென்றால் மாடுகள் இழுத்துச் செல்ல மிகக் கடினமாக இருக்கும்.

#### 4.1.7.3. மோழி

மோழி என்பது கலப்பை உழுவதற்கு ஏற்ற வகையில் உழுபவர் பிடித்துச் செல்லப் பயன்படும் ஒரு கருவியாகும். அதன் அடிப்பகுதியைக் கலப்பையுடன் சேர்த்தக் கட்டி, நுனிப் பகுதியைக் கையால் அழுத்திப் பிடித்துப் பயன்படுத்துகின்றனர். இது 'இசட்' வடிவில் காணப்படும். இதற்கும், மேற்கண்ட மரங்களைப் பயன்படுத்துவதுண்டு.

#### 4.1.7.4. கொண்டி

கொண்டி என்பது 'யு' வடிவ அமைப்பில் இருக்கும். இது கலப்பையின் அடியில் பொருத்தப்படுகிறது. இது 'கொழுவை' (கார்) தாங்கிப் பிடிக்கப் பயன்படுத்தப்படும் கருவியாகும். இ∴து இரும்பால் செய்யப்பட்ட நான்கு 'இஞ்சுகள்' கொண்டதாக இருக்கும்.

#### 4.1.7.5. கயிறு

கலப்பையுடன் மோழியை, இறுக்கமாகக் கட்டிய பின்னர் அதன் ஒரு பகுதியை நுகத்தடியோடு, இணைத்துக் கட்டுவதற்குக் கயிறு பயன்படுத்தப்படுகிறது. மலையாளிகள் முன்பு காட்டுக் கொடிகளைக் கொண்டு பயன்படுத்திக் கலப்பையைக் கட்டியதாகக் கூறுகின்றனர். இந்தக் கயிறு கலப்பையில் இருந்து நுகத்தடி வரையிலும் பொருத்தப்பட்டு இருக்கும். இது கலப்பையை இழுப்பதற்கும், ஆழமாக உழுவதற்கும், ஆழம் குறைவாக உழுவதற்கும் துணைநிற்கின்றது.

#### 4.1.7.6. மொளையாணிக் குச்சி

கலப்பையையும், மோழியையும், இணைப்பதற்குப் பயன்படும் ஒரு அடி அளவுள்ள ஒரு குச்சிக்கு 'மொளையாணிக் குச்சி' என்று பெயர். கலப்பையின் மேல் பகுதியிலும்,

மோழியின் அடிப்பகுதியிலும் ஒரு சிறு துளையிட்டு அதில் இரண்டையும் இணைக்குமாறு இக்குச்சியைச் சொருகிவிடுகின்றனர். பிறகு குச்சியில் கயிரை மாட்டி கலப்பையையும், மோழியையும் நன்றாகச் சேர்த்துக் கட்டுகின்றனர். இதனால் கலப்பை இருக்கமாகும். மோழி சாயாமல் இருப்பதற்கு இந்த நுட்பமான குச்சி பயன்படுகிறது.

### 4.1.7.7. பூட்டு

பூட்டு என்பது நுகத்தடியின் இரண்டு பகுதிகளிலும் துளையிட்டு அதில் பூட்டைக் கோர்த்து மாட்டின் கழுத்தில் கட்ட பயன்படும் கருவியாகும். இ∴து இரண்டு 'கைமார்' அளவு கொண்டதாக இருக்கும். மாடுகள் வேகமாக இழுத்துச் செல்லாமல் ஒரு பிடிமாணத்தைத் தரக் கூடியதாகப் பூட்டு இருக்கின்றது.

### 4.1.7.8. சந்துலி

'சந்துலி' என்பது இரும்பால் உருவாக்கப்பட்ட ஒரு கருவியாகும். கொண்டியின் வளைவில் சந்துலின் அடிப்பகுதி பொருத்தி கலப்பை நிலத்தில் ஆழமாக உழுது வருவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. கலப்பையின் முனையுடன் இந்தச் சந்துலி பொருத்தப்படுவதால் மண்ணைக் கிளரப் பயன்படும் கலப்பையைப் பயன்படுத்த முடியாது. எனவே, இந்தக் கருவி உழவுத் தொழிலில் மிகவும் முக்கியமானக் கருவியாகக் கருதப்படுகிறது. இன்று உழவுக்கு டிராக்டர் உள்ளிட அதிநவீன வண்டிகள் இருப்பினும் மலையாளிகள் ஏர்கலப்பையைக் கொண்டு உழும் வழக்கத்தைக் கொண்டவர்களாக இருந்து வருகின்றனர்.

### 4.1.7.9. கடக்குச்சி

கடக்குச்சி என்பது கலப்பையையும், மோழியையும் தளராமல் இருக்கப் பயன்படுத்தப்படும் கருவியாகும். இது ஒரு அடி அளவு கொண்டதாக இருக்கும். கலப்பையையும், மோழியையும் இணைத்துக் கட்டப்பட்ட கயிறு தளர்ந்து விடாமல் இருக்க அதன் இரு பக்கங்களிலும் செருகப் கடக்குச்சி பயன்படுகிறது.

### 4.1.7.10. ஏர்கால்

இது சற்றுத் தடிமனாக உருண்டை வடிவில் சுமார் 8 முதல் 10 அடி வரை நீளம் கொண்டதாகக் காணப்படும். இந்தத் தடியானது கலப்பையையும் மாட்டின் மீது வைத்து கட்டப்படும் நுகத்தடியையும் இணைப்பதற்குப் பயன்படுகிறது. இதனை, ஏர்கால், ஏர்தடி, ஏர்கால் தடி என்றும் மலையாளிகள் அழைக்கின்றனர். இதனைத் தேக்கு, பொரிசு,

செம்பலிச்சுப் போன்ற மரங்களிலிருந்து வெட்டி வெயிலில் நன்கு காயவைத்து அதன் பின்பே பயன்படுத்துகின்றனர்.

### 4.1.7.11. பரம்பு

சங்க இலக்கியமான புறநானூற்றில் 'பரம்பு' பலகை 'தாம்பு' என்ற சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. (புறம்.பா.எ.61:3) மரத்தால் செய்யப்பட்டப் பரம்புப் பலகை ஏரில் இணைக்கப்பட்டு நன்றாக உழுத நிலத்தை மேடு பள்ளம் இல்லாமல் சமமாக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இ∴து மூன்றடி அகலமும், ஐந்தடி நீளமும் கொண்டு பட்டையாக்க இருக்கும். இதில் கைப்பிடி, மரப்பலகை, நுகத்தடி, இரும்பு, சங்கிலி, கயிறு போன்றவைகள் இணைக்கப்பட்டிருக்கும். டிராக்டர் போன்ற நவீனக் கருவிகள் இன்று வந்திருப்பினும் நிராகரிக்க முடியாத மரபு பழந்தொழில் கருவியாகப் 'பரம்பு' இன்றளவும் இம்மக்களிடம் இருந்து வருகிறது.

### 4.1.7.12. மாடு, எருது

வேளாண்மை வரலாற்றில் பயிரிடுதல் என்று கூறும்போது அதற்கு உதவியாக உள்ள பயிர்த் தொழிற் கருவிகள் முக்கியமான ஒன்றாகும். அதற்கும் அடுத்தப்படியாக மனித ஆற்றலும், கால்நடைகளின் ஆற்றலும் பயன்படுத்தப்பட்டது. வேளாண்மைச் சார்புத் தொழிலாகக் கால்நடைகள் பராமரிக்கப்பட்டன. உழவு உழுதல், கதிர் அடித்தல், தானியங்களை வீட்டிற்குக் கொண்டு செல்லல் மற்றும் ஆடு மாடுகளின் சாணத்தைப் பயன்படுத்துதல் எனப் பல்வேறு நிலைகளில் இவை பயன் தரக்கூடியனவாக இருக்கின்றது. முன்பு எருதுகள் இல்லையேல் உழவுத் தொழில் இல்லை என்ற நிலையே காணப்பட்டது. இந்நிலை மாறினாலும் மலையாளிகள் இன்றும் மாடுகள், எருதுகளைப் பூட்டியே ஏர் உழும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றனர்.

### 4.1.7.13. சால்

வேளாண்மைக்கு நீர் மிக அவசியம். நீரைக் கிணற்றில் இருந்து இரைப்பதற்குச் சால் அவசியம். இதன் மேல் வாய் அகன்றும், கீழ்ப் பகுதி பானை வடிவிலும் இருக்கும். இது தகரத்தால் உருவாக்கப்பட்டிருக்கும். இதனை மலையாளியினப் பழங்குடி மக்கள் சிலர் தங்கள் நிலங்களில் சிறிய அளவிலான கிணறு தோண்டி இத்தகைய முறைகளைப் பயன்படுத்தி வேளாண்மை செய்துள்ளனர். அதன் பின்னர் இன்று 'ஆயில் இஞ்சின்' இவர்களின் பயன்பாட்டிற்குள் வந்திருக்கின்றன. வசதி படைத்த சிலர் மட்டும் மின் மோட்டார்கள் பயன்படுத்தி நீர் இரைக்கின்றனர். இருப்பினும் இவர்களிடத்தில் இலைமறைக்

காய்போல் இன்றும் இத்தகைய வழக்கம் இருந்து வருவதைக் களப்பணியின் போது காணமுடிந்தது.

### 4.1.8. பிற உழவு முறை

இப்பழங்குடி மக்கள் மரக்கலப்பைகளால் மட்டுமின்றி தற்போது எந்திரக் கலப்பைகள் கொண்டும் உழவு செய்கின்றனர். எந்திரக் கலப்பைகள் நவீனத் தொழில் நுட்பங்களால் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றைக் கொண்டு வசதி படைத்த சிலர் உழவு செய்கின்றனர். மேலும், குறைவான நேரத்தில் அதிக அளவில் உழுதல் மனிதன் மற்றும் மாடுகளின் உழைப்புகள் குறைக்கப்படுதல் போன்ற காரணங்களால் எந்திரக் கலப்பையைத் தற்பொழுது சில இடங்களில் பயன்படுத்துவதைக் கள ஆய்வின் போது காணமுடிகிறது.

### 4.1.9. மாடுகளைச் சுழி பார்த்து வாங்கும் பழக்கம்

மலையாளிகள் உழவுக்கு அல்லது வளர்ப்புக்குக் காளை, பசு மாடுகளை வாங்கும் பொழுது சுழி பார்த்து வாங்கும் வழக்கத்தைப் பின்பற்றுகின்றனர். சுழியானது முன் நெற்றி, தலை, முதுகு, தாடைப் போன்ற இடங்களில் இருந்தால் நல்லது என்றும், வால், தொடை, கால் போன்ற இடங்களில் இருந்தால் கெட்டது என்றும் இவர்கள் கருதுகின்றனர். எனவே, நல்லசுழி இருப்பின் வேளாண்மைச் செழிக்கும், மாடுகளின் இனம் விருத்தியாகும் என்றும், இவர்கள் நம்புகின்றனர்.

### 4.1.10. வேட்டையின் போது வழிபாடு

மலையாளிகள் வேட்டைக்குச் செல்லும்போது முன்னோர்களையும், காட்டுத் தெய்வங்களையும் வழிபடுகின்றனர். இந்தத் தெய்வங்கள் காடுகள், ஆறுகள், பழமையான மரங்கள் நீரோடைகள் போன்றவற்றில் வசிப்பதாகக் கருதுகின்றனர். இவர்கள் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் குலதெய்வச் சடங்குகளை நடத்துகின்றனர். மற்ற நாட்களில் விவசாயம் செய்வதற்கு முன்பும், வேட்டையாடுவதற்கு முன்பும் சடங்குகளைச் செய்கின்றனர். வேட்டைக்குப் புறப்படும் முன்பு முன்னோருக்கும் வனத் தெய்வங்களுக்கும் பொங்கல் வைத்து இன்றைய தினத்தில் வேட்டைக்குச் செல்கிறோம், வேட்டையில் பெரிய மிருகங்கள் கிடைக்க வேண்டும் என்று வேண்டி புறப்படுகின்றனர்.

வேட்டையாடித் திரும்பிய பின்பு மிருகங்களின் இருதயம், கல்லீரல் போன்றவற்றைத் தீயில் சுட்டுச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி இலைகளில் வைத்து முன்னோர்களுக்கும் வனத் தெய்வங்களுக்கும் படைக்கின்றனர். இவர்கள் வேட்டைக்குப் பயன்படுத்திய வில், அம்பு, கத்தி, கம்பு முதலிய ஆயுதங்களைப் படையலின் அருகில் வைத்துப் பொட்டு இட்டு

வழிப்படுகின்றனர். வேண்டியதற்கு இணங்க நல்ல வேட்டை கிடைத்ததற்கும், வேட்டைக்குச் சென்றால் நல்ல வேட்டை கிடைக்க வேண்டும் என்றும், கொடிய விலங்குகளிலிருந்து பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கின்றனர்.

மலையாளிகள் யானை, காட்டெருமை, கரடி, பாம்பு, காட்டு நாய், (வேட்டைக்காரன்) குள்ளநரி போன்ற விலங்குகளை வேட்டையாடுவதில்லை. ஆனால், இன்று வேட்டையாடுதல் அரசால் தடைசெய்யப்பட்டுள்ளதால், யாரும் வேட்டைக்குச் செல்வதில்லை. காடுகளில் கிடைக்கும் பொருட்களை மட்டும் சேகரிக்கின்றனர். மாமிசம் உண்ணவேண்டும் என்ற ஆசை இருந்தால் வீட்டில் இருக்கும் கோழி, பன்றிகளை உண்கின்றனர்.

### 4.1.11. மழை வேண்டிச் செய்யும் சடங்கு

மலையாளிகள் வேட்டையாடுதலை நிறுத்திய பின்னர் காட்டுப்பொருட்களைச் சேகரித்தலுக்கும், விவசாயம் செய்வதற்கும் முக்கியத்துவம் தருகின்றனர். மழை பெய்யாதப் போது பயிர்த்தொழில் பாதிக்கப்படுகிறது. புனல்காடுகளில் மழையை நம்பித்தான் வேளாண்மை செய்கிறார்கள். பெரும்பாலான மலையாளிகள் மானவரிப் பயிரை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். மழை இல்லாவிடில் விதைப்புத் தள்ளிப்போகும், விளைச்சல் குறையும். அதனால் குடும்பச்சூழல் பாதிக்கப்படுகிறது. மழை அவர்களின் வாழ்வில் மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருக்கின்றது. இதனால் மழை வளம் வேண்டி வருடந்தோறும் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்கின்றனர். மழைப் பெய்தால் அந்த வருடத்தின் விளைச்சலில் சிறுபகுதியைத் தெய்வங்களுக்குக் கொடுக்கின்றனர்.

### 4.1.12. வேளாண்மைச் சடங்குகள்

மலையாளிகள் வேளாண்மையைச் சார்ந்திருப்பதால் அவை நல்ல விளைச்சலைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகச் சில சடங்குகளைச் செய்து வருகின்றனா். அவை

1. பொன்னேர் கட்டுதல்
2. அறுவடைச் சடங்கு

#### 4.1.12.1. பொன்னேர் கட்டுதல்

மலையாளிகள் சித்திரை மாதம் நல்ல நாள் பார்த்து மழை பொழிந்தவுடன் ஊரில் உள்ள அனைவரும் ஒன்றுகூடி அவரவர் நிலங்களில் ஒரே நாளில் ஏர் உழுகின்றனர். இதனைப் ‘பொன்னேர் கட்டுதல்’ என்று கூறுகின்றார்கள். பொன்னேர் கட்டுவதற்கு ஒரு மாதக் காலத்திற்கு முன்பே எருது மாடுகளுக்குத் தீவனம் கொடுப்பதில் கவனம் செலுத்துகின்றனர். மாடுகளை மடுக்களில் குளிப்பாட்டி மேய்ச்சல் உள்ள காட்டுப்

பகுதிகளில் மேய்க்கிறார்கள். கொம்புகள் சீவி, கொம்பில் வண்ணம் தீட்டுகின்றனர். சலங்கை, மணி போன்றவற்றை மாட்டிற்குக் கட்டுகிறார்கள் பொன்னேர் கட்டுகிற நாளன்று மாடுகளைக் குளிப்பாட்டி அவற்றுக்கும் குங்குமம் இடுகிறார்கள். எருதுகள் பூட்டும் கலப்பையைப் பழுது நீக்கி, கழுவிப் பொட்டு வைக்கின்றனர். புதிய கலப்பை, உரம் கொண்ட எருதுகள் ஆகியவற்றைக் கொண்டு பொன்னேர் கட்டுகிறார்கள். பொன்னேர் கட்டிய அன்று தினமும் ஏர்விடும் நேரத்திற்கு முன்பே ஏரை அவிழ்த்து விட்டு வீட்டிற்கு வருகின்றனர். வீடுகளில் மகிழ்சியாக இருப்பர். ஊரில் உள்ள அனைவரும் ஒரே நாளில் பொன்னேர் கட்டுவதால், மலையாளிகளின் வீடுகளில் குதுகலம் நிறைந்து இருக்கும். வேளாண்மையைச் சார்ந்து வாழக்கூடிய இம்மலையாளிகளுக்கு ஏர்கட்டி உழத் தொடங்கிய நாளையே இந்த ஆண்டின் சிறப்புக்குரிய நாளாகக் கருதுகிறார்கள்.

பொன்னேர் கட்டும் நாளை நாட்டான், கவுண்டன், கங்காணி ஆகியோர் மக்கள் முன்னிலையில் ஒன்றுகூடி கலந்தாலோசித்துப் பின்னர் முடிவு செய்கின்றனர். விதைக்கின்ற சாமை, தினை, கம்பு, கேழ்வரகு, சோளம் ஆகிய தானியங்களை ஒரு 'புட்ட' (சிறிய) கூடையில் எடுத்து குலதெய்வங்களின் முன்பு வைத்து அனைவரும் ஒன்றாகப் படைக்கின்றனர். பின்னர் அதனை நிலத்திற்கு எடுத்துச்சென்று அரிசி, தேங்காய், எள், அவல், வெள்ளம், பொரிக்கடலை போன்றவற்றையும் நிலத்தில் வைத்துப் படைத்து, எருதுகளுக்குக் குங்குமம் வைத்த பின்பு பொன்னேர் கட்டுகிறார்கள். இதற்குரிய நாட்களாகத் திங்கள், வெள்ளியைத் தேர்வு செய்கின்றனர். பின்னர் தானியத்தை அவரவர் நிலங்களில் ஏர்பூட்டி உழுது விதைக்கின்றனர்.

விதைப்புச் சடங்கானது ஓர் ஊர் அளவிலேயே ஒட்டுமொத்தமாக நிகழத்தக்கூடிய நிகழ்வாக இருக்கின்றது. ஒவ்வொரு ஊரிலும் சிற்சில மாறுதல்கள் இருந்தாலும் சடங்குகளின் பொதுப்பண்பில் மாறுதல்கள் காணப்படவில்லை. சித்திரை மாதத்தில் கோடை மழை பெய்தவுடன் அடுத்து வருகின்ற திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பொன்னேர் கட்டுதல் நிகழ்த்துகின்றனர். அன்று நிலத்தில் நன்கு வேலை செய்யக்கூடியவர் சிறு விதையை நிலத்தில் தூவி விதைப்பினைத் தொடங்கி வைக்கின்றார். பின்னர் குடும்பத்தார் அனைவரும் அவ்வாறே சிறு விதையைத் தூவி உழுது முதல் விதைப்பைத் தொடங்கி வைக்கின்றனர். பின்னர் மழை எப்பொழுது வந்தாலும் விதைக்கத் தொடங்கிவிடுகின்றனர்.

### 4.1.12.2. அறுவடைச் சடங்கு

மலையாளிகள் அறுவடைக்கு முன்போ அல்லது பின்போ கன்னிமாருக்கும், காட்டுத்தெய்வத்திற்கும் பொங்கலிட்டுப் பன்றியைப் பலிகொடுத்து வணங்குவதைத் தொன்றுதொட்டுக் கடைபிடித்து வருகிறார்கள். வேளாண்மையை முதன்மைத் தொழிலாகக்

கொண்ட இவர்கள், தங்கள் காடுகளில் சிறு பகுதியைத் தூய்மை செய்துச் சாணம்போட்டு மெழுகிக் கோலம் போடுகின்றனர். அதில் சிறு, சிறு கூர்மையான கற்கள் ஐந்து எடுத்து, அவற்றிற்குப் பொட்டு வைத்து நிலத்தில் நட்டு அவ்விடத்தில் பொங்கல் வைக்கிறார்கள். அதன்பின்னர் 'பன்றியைப்' பலியிட்டு அதன் இரத்தத்தைப் பிடித்து வயல்களில் இறைக்கின்றனா். பன்றியை அறுத்துச் சமைத்து இலையில் போட்டு அதனுடன் வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய்ப் போன்றவற்றையும் வைத்துச் சூடம் ஏற்றி வழிபடுகின்றனர். பின்னா் வந்த உறவினர்களுடன் சமைத்த பன்றிகறியைப் பகிா்ந்து உண்கின்றனா்.

மலையாளிகளுக்கு ஆரம்பக் காலத்தில் கரடுமுரடான காடுகளில் பயிர் செய்வது கடினமாக இருந்ததாம். பின்னர் சிறிது வளர்ச்சியடைந்த நிலையில் காட்டைத் திருத்திப் பயிரிடுவது மிகப்பெரிய வேலையாக இருந்தது. வனவிலங்குகள் குடியிருப்புகளைச் சுற்றி பல்வேறு வகையான இன்னல்களும், பொருள் சேதத்தையும் உண்டாக்கின. ஒருபுறம் காட்டைத் திருத்திப் பயிரிட மறுபுறம் விலங்குகள் தாக்கிக் பயிர்களை செதப்படுத்தின. இத்தகையச் சூழலில் எங்களுக்கு உறுதுணையாக இருந்தது காட்டுத்தெய்வமும், கன்னிதெய்வமும் என்று 'மலையாளிகள்' கூறுகின்றனர். மேலும், விளைச்சலில் கிடைத்த சிறு பகுதியைப் பிற தெய்வங்களுக்கும் பொங்கல் வைத்து வழிபடுகின்றனர். தெய்வங்களின் சக்தியால் தான் அதிக அளவு விளைச்சல் கிடைத்தது என்றும், விளைச்சல் இல்லையென்றால் தெய்வக் குற்றத்தால் விளைச்சல் கிடைக்கவில்லை என்றும் நம்புகின்றனர். ஆண்டிற்கு ஒரு முறை இவ்வாறு தெய்வங்களுக்குப் பொங்கல் வைத்துப் பலியிட்டு வழிப்பட்டு வருவதன் மூலம் தெய்வக் குற்றங்களிலிருந்து காக்கப்படுவதாக இவா்கள் நம்புகின்றனர்.

### 4.2.0. மருத்துவம்

நவீன முறைகளில் மாத்திரைகளும், மருந்து வகைகளும், அறுவைச் சிகிச்சை முறைகளும் வியக்கத்தக்க வகையில் வளர்ச்சி அடைந்துள்ளன. இருப்பினும் நவீனம் இன்னும் பழங்குடி மக்களிடம் சரிவர அறிமுகம் ஆகாத நிலையில் உள்ளது. ஆனால், மூலிகை மருத்துவ முறைகளை இன்றளவும் பெரும்பான்மையாகக் கடைப்பிடித்து வருகின்றனர்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது ஆன்றோர் வாக்கு இச்சித்தாந்தத்திற்கு ஏற்ப இன்றும் மருத்துவத்தின் சிறப்புக் கிராமந்தோறும் 'பாட்டி வைத்தியம்' என்ற பெயரில் நிலைப்பெற்று உள்ளது.

ஆங்கில மருத்துவம் செல்வாக்குப் பெற்றிருந்தாலும் நாட்டுப்புற மருத்துவத்தில் கிடைக்கப்பெறும் மருத்துவ குணங்கள் உடலுக்கு எந்தவிதமான தீங்கும் ஏற்படுத்துவதில்லை. சில நேரங்களில் ஆங்கில மருந்து உட்கொள்கின்றபொழுது உடல் ஏற்றுக்கொள்ளாமல் பல்வேறு விதமான பக்கவிளைவுகளை ஏற்படுத்துவதுண்டு. ஆனால், நாட்டு மருத்துவத்தில் இதுபோன்று பின்விளைவுகள் ஏற்படுவதில்லை.

மனிதனின் வாழ்க்கை அனுபவங்கள் மருத்துவத்தின் மகிமையை உணர்த்தியிருக்கிறது. தம்மைச் சுற்றி இருக்கின்ற செடிக் கொடிகளில் எவையெல்லாம் மனித இனத்தைக் காக்கவல்லவை என்பதைப் பல நேரங்களில் சோதித்து அறிந்து கொண்டான் மனிதன். ஏதேசேச்சையான கண்டுபிடிப்புக்களும் சோதனை முறைகளும் இன்ன நோய்க்கு இன்ன மருந்து என அறிய உதவியது.

சவ்வாதுமலை இயற்கைச் சூழ்ந்த அடர்ந்த வனப்பகுதியாக இருப்பதால் இங்குக் கிடைக்காத நாட்டு மருந்துகளே இல்லை. இங்குவாழும் மக்களுக்கு ஏற்படும் எல்லா நோய்களுக்கும் தீர்வுகாணும் பொருட்டு இம்மலைப்பகுதியில் கிடைக்கும் மூலிகைகள் பயன்படும்படியாக உள்ளன. மலையாளிகள் பின்பற்றும் மருத்துவ முறைகளை மாந்திரீக மருந்துவம், நம்பிக்கை மருத்துவம், இயற்கை மூலிகை மருத்துவம், நோய்களும் மருத்துவமும் என்ற வகையில் வகைப்படுத்தலாம்.

### 4.2.1. மாந்திரீக மருத்துவம்

மலையாளிகள் தமக்கு வந்திருக்கும் நோயை மந்திரங்கள் மூலம் குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில் மந்திரவாதிகளை நாடுகின்றனர். குழந்தைகளுக்குக் கண்ணேறு பட்டுக் காய்ச்சல் போன்ற நோய்கள் வந்தால் மந்திரங்கள் தெரிந்த மலையாளிகள் மந்தரித்து அவற்றை குணப்படுத்துவதாகக் கூறுகின்றனர்.

மந்திரங்கள் தெரிந்த மந்திரவாதி தனது மேல் துண்டையோ அல்லது எருக்கம் பூங்கொத்தையோ, வேப்பிலையையோ எடுத்து நோய்யுற்றவரைப் பார்த்து விசிறி விசிறி மந்திரங்களைச் சொல்லுவார். இதனை, இப்பழங்குடிகள் 'மந்திரம் போடுதல்' என்று கூறுகின்றனர். குழந்தைக்கு அதிகமாகக் கண்ணேறுபட்டிருந்தாலும் தீயசக்திகள் தொடர்ந்தாலும் மந்திரிக்கும்போது தெரியும் என்று மந்திரவாதி கோவிந்தராஜ் கூறுகின்றார். அதிகமாகக் கண்ணேறுப்பட்டிருந்தாலோ அல்லது தீயசக்திகள் தொடர்ந்து இருந்தாலோ மந்திரிப்பவர்க்கு மந்திரிக்க முடியாமல் திணறுவார் என்று கூறுகின்றனர். இது போன்ற நோய்களுக்குச் சில பரிகாரங்கள் செய்து மந்திரித்தால் நோய்கள் குணமாகும் என்று கருதுகின்றனர்.

மலையாளிகள் பேய், பிசாசு, செய்வினை போன்றவற்றை விலக்குவதற்கு மந்திர தந்திரங்களைக் கையாளுகின்றனர். சாதாரணக் காய்ச்சல், தலைவலி, சுழுக்குப் போன்றவற்றிற்கும் மந்திரித்தால் சரியாகிவிடும் என்று கூறுகின்றனர். நோயாளியை வீட்டின் நடுமுற்றத்தில் உட்கார வைத்து மந்திரங்களைச் செய்யக்கூடிய மந்திரவாதி மந்திரங்களைச் முணுமுணுத்துக்கொண்டே துண்டு, இலைப் போன்றவற்றை விசுருகின்றனார். பின்னர் தலைமுதல் கால் வரை மேலிருந்து கீழாக மூன்று முறை இலைகளால் தொழுகிறார். அவ்வாறு செய்யப்படுவதால் நோய் மேலிருந்து கீழ் நோக்கி போய்விடும் என்று கூறுகின்றார்கள். நோய் வந்தவருக்குச் சாம்பல் நீரு பொட்டு வைத்து, அவரைக் குளிக்க வைக்கின்றனர். மாந்திரீக மருந்துகளை உளவியல் சார்ந்தது என்றும் கருதலாம். மந்திரிப்பதால் உள் மனதில் நம்பிக்கைக் பிறக்கின்றது. நம்பிக்கையின் மூலம் உள்மனதை மாற்றி நோயைக் குணப்படுத்துகின்றனர்.

### 4.2.2. நம்பிக்கை மருத்துவம்

மலையாளிகள் தெய்வங்களுக்கு நேர்த்திக் கடன் செய்தால் தமக்கு வந்திருக்கும் நோய் விலகிவிடும் என்று நம்புகின்றார்கள். தெய்வக் குற்றத்தின் காரணமாகத்தான் அம்மை நோய் வருவதாகவும் நம்புகிறார்கள். அதனால் அம்மை நோய் நீங்க மாரியம்மனுக்குக் கூழ் ஊற்றுவதாகவோ அபிசேகம் செய்வதாகவோ வேண்டிக்கொள்கின்றனர். அம்மனாகக் கருதப்படும் வேப்பிலையை நோயாளியின் தலைமாட்டில் வைத்து, குணமடைய வேண்டும் என்று வேண்டியவாறே இருக்கின்றனர். சிலர் நோய் குணமாக அம்மன் கண்களைப் போன்று பித்தளை நகைகளை உருவாக்கி மாரியம்மனுக்குக் காணிக்கையாக்குகின்றனர். இதே போன்று கை, கால், போன்ற உடலுறுப்புகள் பாதிக்கப்பட்டாலும் அந்த நோய் நீங்குவதற்காகக் கை, கால் போன்ற உறுப்புக்களைப் பித்தளையாலும், தங்கத்தாலும் காணிக்கையாக்குவதும் இம்மக்களிடத்திலே வழக்கிலிருக்கிறது. நோய் நொடியின்றி குடும்பத்தில் நிம்மதி நிலவ வேண்டும் என்பதற்காக ‘முனியப்பிச்சி’, ‘கன்னிமார்’ போன்ற தெய்வங்களுக்குப் பொங்கலிட்டுக் கோழிப் போன்ற உயிரினங்களை உயிர்ப்பலி கொடுக்கின்றனர்.

மாதவிடாய் உண்டான பெண்களின் மேல் குறிப்பாகக் கன்னிப்பெண்களின்மேல் தீய ஆவிகள் விருப்பத்துடன் உறையுமென்று இவர்கள் நம்புகின்றனர். இதன் காரணமாகப் பூப்படைந்த பெண்கள் தனிக்குடிசையில் ஏழு நாட்கள் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்குப் பாதுகாப்பாகக் குடிசைகளில் அரிவாள், விளக்குமாறு, உரல் போன்றவற்றை வைக்கின்றனர். இவ்வழக்கம் இன்று பல்வேறு பழங்குடி இன மக்களிடையே காணப்படும் மரபு வழிப்பட்ட நம்பிக்கையாக இருந்து வருகிறது. இவ்வாறு மலையாளிகள் சிறுவர் முதல் முதியோர்கள்

வரை எல்லாருக்கும் வரும் நோய்களுக்குக் காரணம் தெய்வங்களின் கோபமே என்று கருதி தெய்வங்களுக்குக் காணிக்கை செலுத்தியும் வேண்டுகின்றனர். பலியிடுதல், காணிக்கை செலுத்துவதன் மூலம் தங்களுக்கு வந்திருக்கும் நோய்கள் நீங்கி விடுமென்று மலையாளிகள் கருதுகின்றனர்.

### 4.2.3. இயற்கை மருத்துவம்

மூலிகைகளைக் கொண்டு தமக்கு வந்திருக்கும் நோய்களைப் போக்கும் முறையே இயற்கை மருத்துவமாகும். நாட்டுப்புற மக்கள் தங்களின் நோய்களுக்குத் தாம் அனுபவத்தால் கண்ட மூலிகைச் செடிகளின் மூலமாகவே குணம் கண்டுகொள்கின்றனர். இயற்கையின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் மலையாளிகளுக்கும் உண்ணும் உணவு கூட மருத்துவ அடிப்படையிலேயே அமைகின்றது.

கிழங்கு, காய்கனிகள், மலர்கள், தேன், தானிய வகைகள், கீரைகள், சிறு விலங்குகளின் இறைச்சிப் போன்ற உணவு வகைகளே அவர்களின் நலமான வாழ்வுக்கு வளமூட்டுகின்றன. இருப்பினும் அவர்களுக்கு நோய்கள் வருவதற்கான அறிகுறிகள் தென்படுமானால், காடுகளில் கிடைக்கக்கூடிய இயற்கை மூலிகைப் பொருட்களாலேயே அதனைக் குணப்படுத்திக் கொள்கின்றனர். மலையாளிகளுக்கு இயற்கையாக வரும் நோய்கள் பின்வருமாறு அமைகிறது.

#### 4.2.3.1. தலைவலி

மலையாளிள் சாதாரணமாகத் தலைவலி வரும்போது கடுகு இலையை அரைத்து நெற்றியில் பத்துப் போடுகின்றனர். வெற்றிலையை நெருப்பில் வாட்டியெடுத்து நெற்றியில் பத்துப் போட்டுக்கொள்வதும் உண்டு. மேலும், வெண்நொச்சி இலையை அறுத்து நீரில் நன்கு கொதிக்க வைத்துத் தலையில் உற்றினால் தீராதத் தலைவலியும் தீர்ந்து விடும் என்று கூறுகின்றார்கள்.

“காட்டில் மிதமான சீதோஷண நிலையில் காய்க்கும் காட்டுப் பாகம் இலையைப் பறித்துச் சுக்கு, மிளகு இவற்றை நன்றாகப் பொடி செய்து, சிறிது உப்பும் கலந்து கொதிக்க வைத்து, அதனைத் தினமும் சாப்பிட்டு வந்தால் 90 நாட்களில் தலைவலி நின்றுவிடும்”[10] என்கிறார் குனேசன்.

#### 4.2.3.2. காதுவலி

வலம்பிரிக்காய், இடம்பிரிக்காய் மரங்களில் இருக்கும் ஒட்டுச் செடியின் காய்களை தேங்காய் எண்ணையில் காய்ச்சி, ஆறிய பிறகு அந்த எண்னெயைக் காதுக்குள் விட்டால் காதுவலி, காதடைப்புக் குணமாகும் என்கின்றனா்.

#### 4.2.3.3. வயிற்று வலி

அருகம்புல் வேரினை அரைத்துக் குடிப்பதால் வயிற்றுவலி நீங்கும் என்கின்றனா். மேலும் நாவற் பழத்தின் கொட்டையை அரைத்துச் சாப்பிட்டால் வயிற்றுப் போக்குக் குணமாகும் என்றும், நாவற்பழத்தைத் தேனுடன் கலந்து சாப்பிட்டால் வயிற்றுப் போக்கு நின்றுவிடும் என்றும் கூறுகின்றனா். இவா்கள் கூறும் இந்த மருத்துவ முறையினை மெய்ப்பிப்பது போலவே டாக்டா் என்.கே.சண்முகம் அவா்கள் “நாவல் பழமானது வயிற்றுக் கோளாறுகளைக் குணப்படுத்தும் தன்மையுடையது”[11] என்று கூறுகின்றாா்.

#### 4.2.3.4. காதில் சீழ்வடிதல்

எருக்கஞ்செடி எல்லா இடங்களிலும் வளரும் தன்மைக் கொண்டது. இதன் இலை சிறிய அளவில் இருக்கும். இந்தச் செடியில் மஞ்சள் நிறமான பழுத்த இலைகள் ஒட்டிக்கொண்டிருக்கும், இந்த இலைகளில் தேவையான அளவு எடுத்து இடித்துச் சாறு எடுத்துப் பின்னர் ஒரு தம்ளர் அளவு சாற்றை மண் சட்டியில் விட்டு 50 கிராம் வெள்ளைப் பூண்டு, 50 கிராம் பெருங்காயம், 50 கிராம் வசம்பு விட்டு, 100 கிராம் நல்லெண்ணையுடன் கலக்கி நன்கு காய்ச்ச வேண்டும். பின் நன்கு சூடு ஆறிய பின் சீழ் வடியும் காதைச் சுத்தம் செய்து அக்காதில் சிறிதளவு காய்ச்சிய எருக்கஞ்செடி கசாயத்தைத் தொடர்ந்து ஏழு நாட்கள் விட்டு வந்தால் காதில் சீழ் வருவது நின்று விடும் என்று கூறுகின்றனர்.

#### 4.2.3.5. காலில் குத்திய முள் வெளியேற

காட்டையும், மலையையும் இருப்பிடமாகக்கொண்டு வாழ்ந்து வரும் மலையாளிகள், தங்களுடைய தேவைகளையும் இவற்றின் மூலமே பூர்த்திச் செய்துக் கொள்கின்றனர். இவா்கள் ஆடு, மாடு மேய்பதற்கும், விறகு வெட்டுவதற்கும் காட்டிற்குச் செல்வதுண்டு. அவ்வாறு செல்லும்போது காலில் முள்குத்தி உடைந்து, கால் பாதத்தின் உள்ளேயே தங்கி விடும். அப்பொழுது முள் குத்திய இடத்தில் எருக்கம்பால் தொடா்ந்து மூன்று நாட்கள் விட்டு வந்தால் குத்திய முள் தானே வெளியே வந்து விடும் என்கின்றனர்.

### 4.2.3.6. பல்வலி

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என்ற முதுமொழிக்கேற்ப மலையாளிகள் பல்வலிக்குக் கருவேலம்பட்டையைக் காயவைத்து, வறுத்துப் பொடியாக்கிப் பல்வலி உள்ள இடங்களில் தேய்த்தால் பல்வலி குணமடையும் என்கின்றனா். சிலா் கல் உப்பினைப் பல்வலி உள்ள இடத்தில் கடித்து வைத்துக்கொள்வதும் உண்டு. மேலும் நாயுருவி வேரின் பொடியையும் பல்வலிக்கு மருந்தாகப் பயன்படுத்துகின்றனா்.

### 4.2.3.7. பாத வெடிப்புக் குணமாக

காடு சாா்ந்த பணிகளைச் செய்யும் மலையாளி இன மக்கள் சிலருக்குப் பாதத்தில் வெடிப்பு ஏற்பட்டுக் கடுமையான எரிச்சல் இருந்து கொண்டேயிருக்கும். அப்போது மருதாணி இலையைப் பறித்து நன்கு அரைத்து அதனுடன் சிறிது எலுமிச்சைச் சாற்றையும் கலந்து வெடிப்பு உள்ள இடங்களில் பூசிக்கொண்டு படுத்தால் எரிச்சலும், வெடிப்பும் குணமாகிவிடுவதாகக் கூறுகின்றனா். மேலும் இம்மலைப் பகுதிகளில் அதிகமான ஊணான் கொடிகள் படர்ந்திருப்பதால் அவற்றின் பாலை எடுத்து வெடிப்பு ஏற்பட்ட இடங்களில் தடவி பாத வெடிப்புகளைக் குணப்படுத்திக் கொள்கின்றனர்.

### 4.2.3.8. கண்வலி

மலையாளிகள் காட்டுப் பணிகளில் ஈடுபடும்போதும், காட்டுப் பொருட்கள் சேகரிக்கச் செல்லும் போதும் முற்செடிகள் கண்களில் பட்டுக் கண்வலியை ஏற்படுத்துவதுண்டு. அப்பொழுது கண்களில் தாய்பால் விட்டு குணப்படுத்துகின்றனா். சிலா் நாயின் காதினை அறுத்து அதன் இரத்தத்தைக் கண்ணில் விடுவதன் மூலம் வலி குறையும் என்றும், விரைவாகக் குணமாகும் என்றும் கூறுகின்றனர்

### 4.2.3.9. உடல் வீக்கம்

காடுகளில் அயராது உழைக்கும் மலையாளிகளுக்குச் சதைப் பிரட்டு, சுழுக்குப் போன்றவைகளால் உடலில் வீக்கம் ஏற்படுவதுண்டு. அதற்குக் சுண்டைக்காய் செடியின் இலையைக் கொண்டுவந்துப் பொடியாக்கி மண் சட்டியில் போட்டு லேசாக வதக்குகின்றனர். நன்றாக வதங்கி வரும் போது அதில் ஒரு தேக்கரண்டியளவு வேப்பெண்ணெய்யை விட்டு கிளறி லேசான சூடு இருக்கும் போது உடலில் ஏற்பட்டுள்ள வீக்கத்தின் மேல் வைத்துக் கட்டினால் அடுத்த நாளே வீக்கம் குறைந்துவிடுகிறது என்று கூறுகின்றனா். சுண்டைக்காயில் மனிதர்களுக்குத் தேவையான இரும்புச்சத்து ஏராளமாக உள்ளது. இதனைத் தினமும் உணவில் சேர்த்துக் கொண்டால் உடலில் பலம் பெருகும் என்றும் நம்புகின்றனா்.

#### 4.2.3.10. விசக்கடி

காடுகளைச் சுற்றியுள்ள குடியிருப்புகளைக் கொண்டுள்ள மலையாளி இன மக்களை விசம் கொண்ட பூச்சிகள் கடிக்க வாய்ப்புண்டு. அதன் விளைவாகப் புண்கள், தழும்புகள், கொப்புளங்கள், அரிப்புகள் ஆகியவை ஏற்படும். அப்பொழுது 'வண்டுகடி பட்டை' என்றே ஒரு வகைத் தாவரத்தின் பட்டையை எடுத்து நன்கு பொடியாக்கி வேப்ப எண்ணெய்யில் கலந்து அந்த இடங்களில் பூசினால் நாள்பட்ட கடிநோய்கள் குணமாகும், அரிப்புகள் குறையும் என்கின்றனர். செம்பருத்தி இலையின் சாறுகளைக் கொண்டும் இதனைப் போக்க முடியும் என்கின்றனர்.

செம்பருத்தி எல்லா இடங்களிலும் எளிதில் கிடைக்கக் கூடியத் தாவரமாகும். இதன் இலையைக் கொண்டுவந்து உரலில் போட்டு இடித்து நன்கு கசக்கிப் பிழிந்து சாறு எடுத்து அரை டம்ளர் அளவு சாற்றை வண்டு கடித்த இடத்தில் பிழிந்து விடவேண்டும். இவ்வாறு ஐந்து நாட்கள் இம்முறையைக் கடைப்பிடித்தால் வண்டுகள் கடித்த இடம் தெரியாமல் மறைந்து விடும் என்பர். இந்நாட்களில் அசைவ உணவுகள் உண்பதைத் தவிர்க்க வேண்டும். பருப்புக் கலந்த உணவுகளை அதிகம் எடுத்துக் கொள்வது நலம். மேலும், பூச்சிகள் கடித்த இடங்களில் குப்பைமேனியின் தழைச் சாற்றை எடுத்து அவ்விடத்தில் தடவினால் விஷக்கடியின் தன்மை குறைந்துவிடும் என்றும் கூறுகிறார்கள்.

#### 4.2.3.11. பாம்புக்கடி

மலையாளிகள் "பாம்பு கடித்தவருக்கு வெள்ளருக்கு செடியின் வேரினை அரைத்து, குழந்தைகளின் சிறுநீரில் கலந்துக் கொடுக்கின்றனர். அவ்வாறு கொடுத்தால் பாம்பின் விஷம் படிப்படியாகக் குறையும் என்கின்றனர். வெள்ளருக்குச் செடியின் பாலைப் பாம்பு கடித்த இடத்தில் வைத்தால் கடித்த பாம்பு இறந்து விடும் என்றும் கூறுகின்றார்கள். பின்னர் அரை நாழிகையானதும் பாம்பின் விஷம் முறிந்து விடும் என்கின்றனர். தொடர்ந்து ஐந்து நாட்கள் எடுத்துக் கொண்டால் விஷம் முழுவதும் மறைந்து விடும்"[12] என்று தங்கம் கூறுகின்றார்.

"மலசர் பழங்குடிகள் உறிக்கால்வேர், சிறியா நங்கைவேர், பெரியா நங்கைவேர், அமுக்கலான்வேர், கருஊமத்தான் வேர் ஆகியவற்றை மஞ்சளுடன் அரைத்துக் கொடுப்பார்கள். கடிவாயிலும் மூலிகைக் கலவையைப் பூசுவதுண்டு"[13] என்கின்றார்

4.2.3.10. **வெட்டுக் காயம்**

மலையாளிகள் விறகு வெட்டும் போது கால்கைகளில் வெட்டுப் பட்டால் உடனே 'தும்பை' என்னும் பச்சிலைச் செடியின் இலையைப் பறித்து அதனை நன்கு அரைத்து வெட்டுப் பட்ட காயத்தில் வைத்துக் கட்டுகின்றனர். இவ்வாறு தொடர்ந்து ஒரு வாரம் கட்டினால் வெட்டு காயம் ஆறிவிடும் என்று கூறுகின்றனர்.

## 4.3.0. தொகுப்புரை

மலையாளிகளின் தொழில் முறைகளையும், மருத்துவத்தையும் களப்பணியின்போது அறிந்ததில் பின்வரும் முடிவுகள் கிடைக்கின்றன.

- ❖ மனிதன் வாழும் இயற்கைச் சூழலுக்கு ஏற்றவாறு அவனது தொழில்களும் அமைகின்றன. மலையாளிகளின் தொழில் முறைகளும் அவ்வாறே அமைந்துள்ளன.
- ❖ மலையாளிகள் வேளாண்மை, வேட்டையாடுதல், கால்நடைகளை வளர்த்தல், உழுதல் எனப் பண்பட்ட வேளாண்மைப் படிநிலைகளைக் கடந்து வந்துள்ளனர்.
- ❖ இயற்கை வனங்களில் வாழும் பழங்குடி மக்கள் தேனெடுத்தல், நிலத்தினை அகழ்ந்து கிழங்கெடுத்தல், காடுகளில் கிடைக்கும் காய்கனிகளைச் சேகரித்து உணவாக்கிக் கொள்ளல் போன்றவை மூலம் வாழ்க்கை நடத்துகின்றனர்.
- ❖ மலையாளிகள் பயிர்களைப் பருவங்கண்டு விதைக்கின்ற நுட்பத்தை அறிந்தவர்களாக உள்ளனர் என்பதைக் கள ஆய்வின்போது காணமுடிந்தது. இவ்வாறு உழவுத் தொடர்பான ஒவ்வொரு செயல்பாடுகளிலும் பல தெழில்நுட்பங்களைக் கொண்டுள்ளனர்.
- ❖ பழங்குடிச் சமூகத்தில் பகிர்ந்து உண்ணும் பண்பு இன்னமும் உயிரோட்டமுள்ளதாக உள்ளது. வேட்டையாடியதில் கிடைக்கும் விலங்குகளின் இறைச்சியைக் கூறுகளாக்கி முதல் கூறு சமூகத்தின் விதவைகளுக்கும் முதியவர்களுக்கும் வழங்கப்படும் பண்பு தொடர்கிறது. மேலும், மலையாளிகள் இன்றைய அறிவியல் வளர்ச்சியின் காரணமாக நாகரீக வாழ்வை எட்டியிருந்தாலும் தொன்மையான மரபு சார்ந்த பண்பாட்டுக் கூறுகளைப் பின்பற்றி வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பதை அறியமுடிகிறது.
- ❖ வேளாண்மைச் சடங்குகளுக்கும், மழைச் சடங்குகளுக்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது. வழிப்பாட்டுச் சடங்கில் சில தெய்வங்களுக்குச் சித்திரை மாதத்திலும், பிற தெய்வங்களுக்கு மற்ற நாட்களிலும் விழா எடுத்து

வழிப்பட்டு வருவது வழக்கமாக இருந்து வருகிறது. தெய்வங்களை மகிழ்ச்சி படுத்தவும், சாந்தப்படுத்தவும் உயிர்பலிக் கொடுக்கப்படுகிறது. குலதெய்வ வழிப்பாட்டில் சில உணர்வு மேலோங்கி இருப்பதை காணமுடிகிறது.

- ❖ மலையாளிகளின் மருத்துவ முறைகள் அவர்களின் பண்பாட்டோடும், பழக்க வழக்கங்களோடும், சமூக அமைப்போடும் பின்னிப் பிணைந்து கிடப்பதை உணர்ந்துக்கொள்ள முடிகின்றன.
- ❖ பழங்குடிகளின் குடியிருப்புகளுக்கு அண்மையில் கீழ்பகுதியிலிருந்து படை எடுத்து வந்தவர்கள் பழங்குடிகளின் நிலங்களை அபகரித்து விவசாயம், தோட்டப் பயிர்கள் செய்ய துவங்கியபின் முழுவதும் மின்சார கம்பி வேலிகளை அமைத்துக்கொண்டுள்ளனர். பல சமயம் யானைகள், காட்டுப் பன்றிகள், காட்டு எருமை என வனத்தின் முக்கியமான கானுயிர்கள் மின்சாரம் பாய்ந்து இறந்துப் போவதும் காணமுடிகிறது.
- ❖ இதனை அறிந்தும், அறியாது போல் செயல்படும் வன அதிகாரிகள் பழங்குடி மக்கள் மீது பொய் வழக்குகள் போடுவது மட்டுமல்லாமல் அவர்களை வனங்களை விட்டே வெளியேற்றும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

**அடிகுறிப்புக்கள்**

1. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி ஐந்து, (1987), ப.342.
2. பாரதியார் கவிதைகள், ப.147.
3. திருக்குறள், குறள், 65.
4. ஆறு., இராமநாதன், நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப.185.
5. கோவிந்தராஜ், ஊர்கவுண்டர், சின்னக்கீழ்பட்டு.
6. கேசவன், ஊர்கவுண்டர், கோம்பை.
7. பெரும்பாணற்றுப்படை, 51வது அடி.
8. வி.சி., சசிவல்லி, பண்டையத் தழிழர் தொழில்கள், ப.121.
9. தங்கம், பெரியகீழ்பட்டு, விவசாயம்.
10. என்.கே., சண்முகம், மூலிகைக் கலைக் களஞ்சியம், ப.492.
11. ந., கணேசன், கொல்லிமலையில் சித்தமருத்துவத்தின் பயன்பாடுகள், ப.34.
12. த., கவிதா, மலசர் பழங்குடிகள், ப.161.
13. சி.மோ. இரவிச்சந்திரன், (மு.ப.ஆ) கொங்கு நாட்டுப்புறவியல், தொகுதி-2, ப.192